# வர்ம மருத்துவத்தின் அடிப்படை

## பிரிவு-1

### அறிமுகம்

1 : 1 வர்மம் என்றால் ஏன்ன?

1 : 2 மருத்துவத்தில் வர்மத்தின் பங்கு

1 : 3 வர்மமும் மனிதஉடலும்

1 : 4 வர்மத்தைப் போன்ற பிற மருத்துவங்கள்

1 : 5 வர்மத்தின் உட் பிரிவுகள்

-

வர்மம் ஓர் இந்திய மருத்துவம். குறிப்பாக தமிழ் பரம்பரை மருத்துவம் (Tamil Traditional Medicine) தமிழர்கள் இதை ஓரு தற்காப்பு கலையாகவும், மருத்துவ முறையாகவும் கையாண்டு வந்துள்ளனர். சித்த மருத்துவ முறையின் ஓர் உப மருத்துவமாக இதை கையாண்டாலும், வர்ம மருத்துவம் ஓரு தனித்துவம் வாய்ந்த மருத்துவம் ஆகும். இந்திய மருத்துவம் பூரணப்பட வேண்டுமானால் வர்ம மருத்துவம் இடம்பெறுவது அவசியமாகும்.

**1 : 1 வர்மம் என்றால் ஏன்ன?**

மனித உடலில் சில குறிப்பிட்ட இடங்களில், குறிப்பிட்ட அல்லது எல்லா நேரத்திலும், குறிப்பிட்ட வேகத்தில் காயம் ஏற்படுமாயின் செயலிழத்தல், நோய் தோன்றல், மயக்கம்

மற்றும் மரணம் ஆகியன ஏற்படுகின்றன. இந்த நிகழ்வுகளே வர்மம்' என்று அழைக்கப்படுகின்றது.

மனித உடலின் இந்த குறிப்பிட்ட இடங்களைப் பயன்படுத்தி, நோய்களை குணமாக்கவும் முடியும், மயக்கத்தைப் போக்கவும் முடியும், உடல் வலிமையை பெருக்கவும் முடியும். இவ்விதம் குணமாக்கும் முறையே வர்ம மருத்துவமாகும்.

*உள்ளபடி நூற்றெட்டு தலம் சாவாகும்*

*உணர்வாகி அத்தலங்கள் உயிருமாகும்*

*கள்ளமுற்ற அத்தலங்கள் பிணியுமாகும்*

*களங்கமாற்றல் அத்தலங்கள் சுகமேகாணும்*

*உள்ளுணர்வாய் அத்தலங்கள் வாசியேற்ற*

*உற்றதினால் அத்தலங்கள் உறுதி சேரும்'*

*புள்ளடிபோல் அத்தலங்கள் கண்டவர்கள்*

*புகலார்கள் எல்லோரும் புவியிலுள்ளோர்க்கே!*

(வர்மஓடிவுமுறிவுசரசூத்திரம்-1200)

மனித உடலில் முக்கியமான வர்மங்கள் 108இடங்களில் காணப்படுகின்றன. இவைகளே ஒரு மனிதன் இறப்பதற்கும் (Death) உயிரோடு இருப்பதற்கும்(Live), நோய் நிலையை அடைவதற்கும் (Disease), சுகமடைவதற்கும் (Treatment), ஆரோக்கியத்துக்கும்(Health) காரணமாக அமைகின்றன.

## 1 : 2 மருத்துவத்தில் வர்மத்தின் பங்கு

மருத்துவத்தில் வர்மத்தின் பங்கு மகத்தானது. நோய் எவ்வாறு தோன்றுகிறது என்று கேட்டால் ‘நோய்கிருமிகளின் தொற்று’ (Infection)என்று உடனே கூறும் காலமிது. உண்மைதான். பெரும்பாலான நோய்கள் தொற்றாலே ஏற்படுகின்றன என்றாலும் இதைத்தவிர பல்வேறு உடல் உபாதைகளை (disorder)அன்றாடம் நாம் ஏதிர்கொள்ளத் தான் செய்கிறோம். இதற்கு பல காரணிகள் உண்டு. உண்ணும் உணவு, சுவாசிக்கும் காற்று, வசிக்கும் இடம், வாழும் காலம், செய்யும் தொழில், பாரம்பரிய கர்மம் எண்ணும் எண்ணம் இவை எல்லாவற்றோடு கூட வர்மமும் ஒரு காரணமாகும்.

உண்ணும் உணவு அறுசுவையாக பகுக்கப்பட்டு, ஏழு உடல் தாதுக்களாக மாற்றப்பட்டு உடலை கட்டி எழுப்புகிறது. அறுசுவைகளின் பகுப்பில் கிடைக்கும் பஞ்சபூதங்களின் கூட்டுறவால் தோன்றும் முக்குற்ற மாறுபாடுகளினால் உடலில் நோய் தோன்றவோ (disease),நோய் மறையவோ (treatment), ஆரோக்கியம் (Health)கிடைக்கவோ செய்யும். உணவு, உணவாக (balanced diet)செல்லும் போது உடலுக்கு உறுதி சேர்க்கும். மாறுபட்டு (imbalanced diet)செல்லும் போது நோயை தோற்றுவிக்கும். மருந்தாகச் செல்லும் போது நோயை குணப்படுத்தும். உண்ணும் உணவு உடலுக்கு சக்தியை கொடுப்பது போலவே சுவாசிக்கும் காற்றும் உடலுக்கு சக்தியை கொடுக்கும்.

*‘உற்பனமாம் நாடி மூன்றும் குரு நாடியாகும்*

*உறப்பாக கண்டவனே பண்டிதன் தான்*

*ஊடுருவல் போலே பாய்ந்த நரம்பிதாமே*

*உத்தமனே அசைந்தோடி ஆடிநிற்கும்*

*அறிவான ஆதாரம் ஆறும்சுற்றி*

*அகமிருந்து வாதம் பித்தம் சிலேற்பம் காட்டும்’.*

*(உற்பத்தி நரம்பறை-130/1000)*

சுவாசிக்கும் காற்று சந்திரகலை (இடகலை நாடி), சூரியகலை (பிங்கலை நாடி), அக்கினி கலை (சுழுமுனை நாடி) ஆகிய மூன்று கலைகளில் செயல்படும்போது ‘வாசி’ எனும் பிராண சக்தி(vital energy)உற்பத்தியாகிறது. இதை சீன மருத்துவத்தில் *“Qi”* என்று அழைக்கிறார்கள். தொடர்ந்து ஓடி சுற்றுவதால் இது சரம் எனப்படும். இச்சரம் தசநாடிகள், தச வாயுக்கள், ஆறாதார சக்கரங்கள், பஞ்ச பூதங்கள் இவற்றோடு இசைந்து முக்குற்றத்தை இயக்குவிக்கும் இம்முக்குற்றம் (வாதம், பித்தம், கபம்) நோய்க்கும், சிகிச்சைக்கும், சுகத்துக்கும் காரணமாக அமைகின்றது.

வாசி எனும் பிராண சக்தி உடலில் சீராக இயங்கும் போது உடல் இயல்பு (Normal)நிலையில் இயங்கும். இந்த இயக்கத்தில் அதாவது சரஓட்டத்தில் ஏதேனும் தடையோ பாதிப்புகளோ ஏற்படுமாயின் உடல் நோய் நிலைக்குத் தள்ளப்படும். இந்த இயக்கம் சீர்செய்யப்படும் போது நோய் குணமாகும்.

இந்த சரஓட்டத்தை தடைப்படுத்தவும், சீர்செய்யவும் வர்மம் பயன்படுகிறது. வர்ம தலங்களை முறைப்படி கையாள்வதன் மூலம் இதைச்செய்யலாம். வர்ம காய காரணமேதுமின்றி சாதாரண நோய் நிலைகளிலே கூட பாதிக்கப்பட்ட முக்குற்றம், சீர்கேடடைந்த தச வாயுக்களின்

இயக்கம் போன்றவற்றை வர்மத்தை பயன்படுத்தி-சரஓட்டத்தை சீர்படுத்தி சரிசெய்யலாம். இவ்வாறு எல்லா நோய்நிலைகளிலும் வர்மத்தை பயன்படுத்தி மருத்துவம் மேற்கொள்ளலாம்.

## 2 : 7 வர்மத்தின் ஆதிவரலாறு

ஆதிசித்தன் சிவனே வர்மத்தின் தந்தையென பல நூல்களும் சான்று பகர்கின்றன. சிவன், விஷ்ணு, பிரம்மா இவர்களுக்கிடையே யார் தெய்வமென நடந்த போட்டியின் விளைவாய் நடந்த யுத்தத்தில் பிறந்ததே வர்மம். இறுதியில் வாத, பித்த, கபம் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொருவர் தெய்வமானார்கள் இதில் கிடைத்த வர்மஅறிவியலை சிவன் மனதில் பதிய வைத்தார்.

### 1. சிவனிடமிருந்து பார்வதிதேவிக்கு சென்ற வரலாறு :

ஒரு சமயம் சிவனும் பார்வதியும் ஒரு காட்டுக்குச் சென்றனர். அங்கிருந்து சிவகிரி என்ற மலைக்குச் சென்றபோது ஒரு வேடன் மரத்தில் ஏறி தவறி விழுந்து மயங்கிக் கிடப்பதைக் கண்டனர். பார்வதி தேவியின் வேண்டுகோளுக்கிணங்க சிவன் தன்னிடமிருந்த பொற்பிரம்பால் வேடனைத் தட்டிவிட வேடன் மயக்கம் நீங்கி இயல்பு நிலையை அடைந்தான். இச்செயலின் இரகசியத்தையும், மனித உடலில் வர்மம், அடங்கல் எனஇருவித தானங்கள் உண்டு என்பதையும் வேறு பல வர்ம இரகசியங்களையும் சிவன் பார்வதிக்கு உரைத்தார்.

### 2. பார்வதிதேவியிடமிருந்து முருகனுக்கு சென்ற வரலாறு :

‘ஆதியில் வர்மம் வந்த அடிவரலாறு தன்னை

வாதியாம் வர்ம காவியம் சொல்ல செகமுகன் காப்பு தானே'

வர்ம காவியம் என்ற நூலில், சூரபத்மன் என்ற அசுரன் ரிசிகளை துன்புறுத்தவே அவர்களெல்லாம் ஒன்று கூடி சிவனிடம் சென்று அழுது நின்றனர். அவர் தன் மகன் வேலனை அழைத்து சூரபத்மனை கொல்ல பணித்தார். வேலனோ சூரனைக் கொல்ல இயலாது தன் தாயிடம் வந்து புலம்பி நின்றார்.

*'வந்ததோர் மகனை நோக்கி வலுவுறும் அசுரன் உயிரைத்தான்*

*கொன்றிடவேணுமென்றால்சொல்லுவேனொன்று கேள்நீ*

*நந்தியோடுசிவனும்சொன்னகாவியத்தில்படுவர்மம் பன்னிரண்டும்*

*தொந்தமுடன் தொடுவர்மம் தொண்ணூற்றாறினொடு*

*தட்டுமுறையுடன்தன்தடைமுறையுந்தானறிய*

*சூட்சமுடன் இடமுரைத்தார் கேள்*

*உந்தனுக்கு இந்தமுறை நன்றாய் தோன்றும்*

*உலகுதனிலொருவருக்கும் விளம்பிடாதே*

*அந்தரமாய் வாய்வுவரியின் எல்லைதனில்*

*அருளுடனே வேலதனை அழுத்திவிட்டால்*

*வந்தவந்த அசுரரெல்லாம் அழிந்து போவார்'*

வேலனின் தாய் உமையாள் தன் மகனிடம் சூரனைக் கொல்ல வேண்டுமானால் நந்தியும், சிவனும் சொன்ன படுவர்மம், தொடுவர்மம், தட்டு முறைகள், தடைமுறைகள் இவற்றை அறிந்து போர் புரியச்சொல்ல வேலனும்

அவ்வாறே செய்து சூரனை அழித்தார் என அந்நூல் கூறுகிறது.

சிவன், நந்தி ஆகியோருக்கு தெரிந்திருந்த வர்மக்கலை பார்வதி தேவியின் மூலமாகவும், சிவனிடமிருந்து நேரடியாகவும் முருகனுக்குச் சென்றது.

**3. முருகனிடமிருந்து ஆகத்தியருக்குச் சென்ற வரலாறு :**

*'நெஞ்சடை அரனார்பெற்ற செல்வனாங்குழந்தை வேலன்*

*நெஞ்சினில் மகிழ்ச்சிகொண்டு நினைவுடனகத் தீசருக்கு*

*மிஞ்சவே உபதேசித்த வெற்றியாந்த தட்டுவர்மம்'*

*(தட்டு வர்ம நிதானம்)*

முருகன் வர்மத்தின் இரகசியத்தை மிக்க மனமகிழ்வோடு அகத்தியருக்கு உபதேசித்தார். அகத்தியர் பல சித்தர்களுக்கு இக்கலையை பயிற்றுவித்தார்.

**வேளிமலையில் அகத்தியர் வர்மம் கற்றது :** (தெட்சணாமூர்த்தி காவியம்-778-780/1000)

*'நிலைக்கலாம் ஆதியிலே மைந்தா கேளு*

*நிலையான வேளிமலைக்கு ஆகும் போது*

*மலைதுருவ மத்தியிலே குகைதானுண்டு*

*மார்க்கமுடன் அதிலொரு பெரியோர்தானும்*

*கலைக்கு அதிகமான சில நூல்கள் பேசி*

கருணையுடன் இருக்கையிலே சென்றேன் யானும்
சிலைக்கதிகம் அகத்தீசா வாவென்றே தான்
தீர்க்கமுடன் உபசரித்து யிருஎன்றாரே'
'இருவென்று அமிர்தரசம் கொள்ளும் போது
இன்பமுடன் சிலம்பிருக்கும் வகையைச் சொல்லி
கருவென்ற பட்சியுட வீச்சம் காட்டி
கால் பலமும் புஜ பலமும் நரம்பும் சொல்லி
திருவென்ற மந்திரத்தின் தீர்க்கம் சொல்லி
சிவ கயில பொதிகையில் போயிரு என்றார்கள்
குருவென்ற பொதிகையிலே யிருந்து கொண்டு
குருவான குருவெடுத்து ஆடினேனே.
ஆடினேன் அதன்பிறகு கோடாகோடி
அளவற்ற வித்தையெல்லாம் ஆடிக்கொண்டு
நாடினேன் சுழிமுனையில் நாட்டம் கொண்டு
நாதாந்த மனோன்மணியை கண்டுதேறி
பாடினேன் வெகு கோடி சாத்திரங்கள்
பக்தியுடன் கருக்கிடைகள் நன்றாய் தோண
தேடினேன் மலை கெடுவு குகைகள் தேடிச்
சென்று திறம்பெற்று மனம் நிலைத்தேன் பாரே'.

தெட்சணாமூர்த்தி காவியம்-1000

என்ற நூல் வேளிமலையில் அகத்தியர் வர்மம் கற்ற வரலாறைக் கூறுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள வேளிமலையிலுள்ள குகையொன்றிற்கு அகத்தியர் சென்ற போது அங்கு ஒரு பெரியவர் அகத்தியரை வரவேற்று உபசரித்து சிலம்பம், பஞ்சபட்சி, அடிமுறைகள் மற்றும் நரம்பியல் (வர்மம்), மந்திரம் இவைகளைக் கற்றுக் கொடுத்து, பொதிகையில் தங்கியிருக்குமாறு பணித்தார். அகத்தியரும் இவற்றையெல்லாம் கற்றுக்கொண்டு பொதிகை மலையில் தங்கியிருந்து குருவுக்கெல்லாம் குருவானார். அகத்தியருக்கு வேளிமலையில் வர்மம் கற்றுக் கொடுத்த பெரியவர் முருகனாக இருக்கலாம் என்று நம்புகின்றனர். வேளிமலையிலிருக்கும் (குமாரகோவில்) முருகன் கோயிலே இதற்கு சான்றாகும். இது குமரி மாவட்டத்தில் தக்கலைக்கு அருகில் உள்ளது.

**4. சேர நாட்டிற்கு வர்மம் கிடைத்த வரலாறு :**

வர்மத்தின் வரலாறு பற்றி பல்வேறு விதமான கர்ண பரம்பரைக் கதைகள் உள்ளன. பழைய காலத்தில் சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் வர்மம் கற்கும் முகமாக இந்திரனை அணுகினர். அவர் இம்மன்னர்களை அலட்சியப்படுத்தவே, சிவனை அணுகினர். சிவபெருமான் அய்யன், கையன் என்ற இரு வர்ம வல்லுநர்களை தயார்செய்து அவர்களை ஆரியங்காவு பகுதியில் தங்கி இருக்கச் செய்தார். பின் அவர்களை பாண்டிய மன்னனிடம் அனுப்பி வர்மத்தின் உயர்நுட்பங்களை கற்றுக்கொடுக்க சொன்னார். ஆனால் பாண்டிய மன்னன் அந்த வர்ம வல்லுநர்களை அலட்சியப்படுத்தி ஏமாற்றினார். எனவே அவர்கள் இருவரும் சேர மன்னனை அணுகினர். சேர மன்னர் அவர்களை

வரவேற்று அங்கேயே தங்கி இருந்து வர்மத்தை மக்கள் பயனுறும் வகையில் வளர்க்க உதவி செய்தார். அவர்களும் அங்கேயே தங்கி குரு-சீடன் முறையில் வர்மத்தை கற்றுக்கொடுத்தனர்.

## 5. கன்னியாகுமரி மாவட்டத்தில் வர்மம் வளர்ந்த வரலாறு :

தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் முஞ்சிறைக்கருகிலுள்ள பார்த்திவசேகரபுரம் என்ற ஊரில் கிடைத்த செப்பேட்டிலிருந்து (கி.பி. 864)-9-ம் நூற்றாண்டில் அப்பகுதியை ஆண்ட கோகருநந்தடக்கன் என்ற ஆய்குல மன்னன் பார்த்திபபுரம் (பார்த்தீபபுரம்) என்ற நகரை உருவாக்கி அங்கு கோயிலும் ஒரு பல்கலைக்கழகமும் அமைத்து அதில் வர்மக்கலையையும் மற்றும் பல்வேறு பாரம்பரிய தற்காப்புக் கலைகளையும் பயிற்றுவிக்கவும், வளர்க்கவும் செய்தார் என்ற செய்தியை அறிய முடிகிறது.

குமரி மாவட்ட வர்ம மருத்துவர்கள் இன்றளவும் இம்மருத்துவக்கலையை பரம்பரை மூலமும், குரு-சீடன் முறை மூலமும் வளர்த்து பாதுகாத்து வருகின்றனர். சொந்த மகனென்றாலுங்கூட பல சோதனைகட்குட்படுத்தி, வர்மத்தைக் கற்று கொள்ளும் தகுதி அவருக்கு இருந்தால் மட்டுமே குருதட்சணையான பொருளை வாங்கி கற்றுக் கொடுக்கின்றனர். மேலும் ஓலைச் சுவடிகளாக இருந்த நூல்களை படியெடுத்தும், கையெழுத்துப் பிரதிகளாக மாற்றியும் இம்மருத்துவ நூல்கள் ஆழிந்து விடாது பாதுகாத்து வருகின்றனர்.

# வர்ம மருத்துவம் (பொது)

## பிரிவு-1

## வர்ம அடங்கல்முறை

1 : 1 பெயருள்ள அடங்கல்கள்

1 : 2 பெயரில்லா அடங்கல்கள்

1 : 3 நோய்களுக்கான அடங்கல்கள்

-

வர்ம அடங்கல் தலங்களைப் பயன்படுத்தி நோய்களை குணப்படுத்தும் முறையே வர்ம அடங்கல்முறை எனப்படும். இவ்வடங்கல் பெயருடனோ அல்லது பெயரின்றியோ இருக்கலாம்.

-

### 1 : 1 பெயருள்ள அடங்கல்கள்

-

வர்ம அடங்கல் தலங்களுள் பல குறிப்பிட்ட ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பெயர்களுடன் அழைக்கப்படுகின்றன. இவையே பெயருள்ள அடங்கல்களாகும். இவை பகுதி-I-ல் விவரிக்கப்பட்டுள்ளது.

-

## 1 : 2 பெயரில்லா அடங்கல்கள்

வர்ம அடங்கல் தலங்களில் சில, குறிப்பிட்ட பெயர்கள் ஏதேனும் குறிக்கப் பெறாமல் இடத்தை மட்டும் அடையாளம் கூறி, அதன் செயல்பாடுகள் விவரிக்கப்பட்டுள்ளன. இத்தகைய அடங்கல்களை பெயரில்லா அடங்கல்கள் எனலாம். இவற்றைப் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அதோடு வர்ம அமர்த்தல் முறைகளும் வர்ம அடங்கல் முறைகளேயாகும் என்பதை நினைவில்கொள்க.

1) **வர்மத்தால் கண்ணடைத்தால்** : உடலில் வர்மகாயம் ஏற்பட்டு கண்களிரண்டும் மூடிக்கொள்ளுமானால் வலதுகை பெருவிரல், தூண்டுவிரல் இரண்டாலும் மூக்கினைத் தொட்டு உற்பத்தியாகும் கடைகண்ணின் இடத்தை காயம் படாதவாறு அழுத்தவும். இதனால் இரண்டு கண்களும் திறக்கும்.

2) **வர்மத்தால் கண்கள் திறந்திருந்தால்** : வர்மத்தால் விழிகள் பெரிதாய் கண்டிடில், கண்களின் மேல் புருவத்தை அழுத்தி தடவி விட கண் விழிகள் சீர்படும்.

3) **வர்மத்தால் கண் உருண்டு வெளியே தள்ளினால்** : செவிக் காலத்திற்கும், ஒன்றரை விரலளவுக்கு தாழ்வாக அலகு எலும்பின் அடுக்கு நெருக்கு தலத்தினுடைய கழுத்துவளை எலும்பின் கோணல் பொய்கை சுழியில் ஒன்றரை விரல் ஆழமுண்டு. அதில் அலவாடி என்ற வர்மமுண்டு. காதினருகில் தலை ஒட்டெல்லும், நாடியும், நெற்றியும் சந்திக்கும். அப்பொய்கையில் ஒரு மஞ்சாடி குரு வைக்கும் அளவுக்கு ஒரு குழி உண்டு. அத்தலத்தில் ஒரு விரலளவுக்கு நான்கு அடங்கல்கள் உண்டு. கண் உருண்டு பொங்கி வெளியில் தள்ளினால் பெருவிரலால் இத்தலத்தில் சரித்து ஊன்றி, கைமுட்டுக்கொண்டு பிடரிக்குழியிலும் ஊன்றி விட கண் இயல்பு நிலையை அடையும்.

4) **கண் தாழ்ந்து போனால் :** வர்மத்தினால் கண் தாழ்ந்து எந்திரம் விழுந்து போனால் மேற்குறிப்பிட்ட சுழியாடிக் குழியில் பெருவிரல் கொண்டு சரித்து வலப்பக்கமாக ஊன்ற வேண்டும். கண் புருவங்கள் இரண்டிலும் விரல் கொண்டு தடவிவிட வேண்டும். இவ்வாறு செய்தால் கண் இயல்புநிலையை அடையும்.

5) **வர்மத்தால் கண் விழி பிசகி தலைவலியும் வந்தால் :** வர்மத்தால் கண் விழிகள் சுழித்து பக்கவாட்டில் இழுத்து பொல்லாத தலை நோவை தந்தால், காதின் பின்புறத்தில் சற்றே மேலே காணும் எலும்பினை அழுத்த கண் விழிகள் செம்மையாகும். தலைவலியும் மாறும்.

6) **தலையில் அடிபட்டு வர்மத்தால் வாய் விட்டு அலறினால் :** கண்களின் புருவங்களை இருபுறமாய் அழுத்தி தடவி விட வேண்டும். கடைக் கண்களுக்குமேல் தள்ளிக்காணும் எலும்புகளை அழுத்தமாய் தடவி விட வேண்டும். அடுத்து தலையின் பின் புறத்தையும் தலை எலும்புக் கூட்டின் பொருத்துகளையும் தடவவும். காதின் உற்பத்தி தலத்தில் அடங்கி தாழ்ந்து இருக்கும் பாகத்தை சற்று அழுத்திவிட குணமாகும்.

7) **வர்மத்தினால் வாய் பூட்டினால் இளக்குமுறை :** (1) வர்மத்தால் வாயானாது கீழும் மேலும் அடைத்து விட்டால், கமுக்கூட்டில் பதமாய் அழுத்த மூடிய வாய் திறக்கும். (2) வர்மத்தால் பல்லும் வாயும் பூண்டு நினைவுகெட்டு மயங்கினால், கீழ் எல்லின் முனையில் மாத்திரை அளவு தூண்டு விரல் முனைகொடுத்து அசைத்து விட்டு, பேன்குழியிலும் சுழியாடியிலும் பருத்திக்குரு வைத்து மாத்திரை அளவு ஊன்றி விட்டு சுற்றிலும் தடவி தாழ்த்தி, முக நாடியை பிடித்து இருபுறமும் அசைத்து விட்டு, உச்சியில் மாத்திரை அளவு

தட்டிவிட வாய்திறந்து பேசும். உடனே சீரகக் கசாயம் குடிக்க கொடுக்க வேண்டும்.

**8) வர்மத்தால் வாய் திறந்திருந்தால் :** வர்மத்தால் வாய் மிகத் திறந்திருந்தால் சென்னியின் இருபுறமும் அழுத்தி விட சுகமுண்டாகும்.

**9) வர்மத்தால் நாக்கு உள்ளே இழுத்துக் கொண்டால் :** (1) இடது கால் தொடைப் பொருத்தில் முறைப்படி அழுத்த நாக்கு சுய நிலைக்கு வரும். (2) தொப்புளில் சுழித்து மேல் நோக்கி அமர்த்த உள்ளே சென்ற நாக்கு இயல்பு நிலைக்கு வரும்.

**10) நாக்கில் குற்றம் கொண்டால் :** தொண்டைக் குழிக்கு மூன்று நெல்லுக்கு உயரே சங்கில் அமர்த்த இளகும்.

**11) வர்மத்தால் நாக்கு வெளியே தள்ளினால் :** (1) வலது மார்பின் கீழ் ஒரு விரல் நீக்கி விரலால் அழுத்தி அமர்த்தி விட தள்ளிய நாக்கானது வாயினுள்ளே போகும். (2) தொப்புளில் சுழித்து கீழ் நோக்கி அமர்த்த நாக்கு இயல்பு நிலைக்கு வரும். (3) வர்மத்தால் வாய்பிழந்து நாவு வெளிதள்ளி மயக்கமுற்றால் கீழ் நாடி எல்லின் முனையில் இதமாக படித்து, மெல்ல அசைத்து, உறுதியாய் உச்சியில் மூன்று அடி அடிக்க நாக்கு உள் இழுக்கும். வாய் பூட்டும்.

**12) வர்மத்தினால் தலையாட்டம் கொண்டால் :** கழுத்தின் தாரைப் பாகத்தில் காணும் எலும்பின் இசைவில் அமர்த்திட சுகமுண்டாகும்.

**13) தலை கவிழ்ந்து போனால் :** கொக்கிக்கு உயரே இருப்புள்ள சீப்பெலும்பிலும் அதன் இசைவிலும், புறங்கழுத்திலும் பிடிக்க நிமிரும்.

14) **வர்மத்தினால் பெருமூச்சு விட்டு வலியும் விக்கலும் கண்டால் :** பிடரிக்குழியில் அழுத்தி விட குணமாகும்.

15) **வர்மத்தால் மூக்கு சுழித்து விறையல், சன்னி, சுரம் கண்டால் :** திலர்த வர்மத்துக்கு ஒரு விரல் மேலாக உள்ள தலத்தில் அழுத்தி விட குணமாகும்.

16) **வர்மத்தால் மூக்கு சுழித்து அலகு கோணி வலிக்கும் சன்னிக்கும் கபத்தினால் முகம் வியர்த்து விறையல் வருவதற்கும் :** அலவாடி குழியின் கைப்பெருவிரலின் வெள்ளைக்கொண்டு இடப்பக்கம் சுற்ற வேண்டும். கைவியர்த்து விறைப்பதற்கும் இவ்வடங்கலை செய்யலாம்.

17) **வர்மத்தால் கைபுஜம் நழுவி விழுந்தால் :** கைக் குழியில் காணும் விசை எலும்பில் அமர்த்தல் ஒன்று செய்ய கைபுஜத்தின் உருளை எலும்பு நழுவி மேலேறி தன் இயல்பான இடத்தை அடையும்.

18) **வர்மத்தால் லிங்கத்தில் இந்திரியம் வெளியானால் :** திலர்தம் என்ற வர்மத்திலிருந்து கீழ்புறமாக இருவிரல்களால் அழுத்த சுகமுண்டாகும்.

19) **வர்மத்தால் காமவெறியுற்று லிங்கம் நிமிர்ந்தால் :** (1) கரண்டையின் கண்ணில் பலத்த தட்டொன்று தட்ட ஆண்குறி சுயநிலையை அடையும். (2) முக்கோணின் நேரிதழிலிருந்து ஐந்து நெல் நீளத்துக்கு இடப்பக்கம் பிடிக்க லிங்கம் சுருங்கும்.

20) **வர்மத்தால் ஆண்குறி உள்வாங்கினால் :** மெதுவாக கூம்பின் குழியில் விரல் கொண்டு மேல் நோக்கி அமர்த்தி விட லிங்கம் தன் நிலையை அடையும்.

21) **வர்மத்தால் ஆண்குறி வெளியே நீண்டால்** : தொப்புளில் இருபக்கமும் இருவிரல் தள்ளியிருக்கும் தலத்திலிருந்து தொப்புளின் விலா பக்கம் நோக்கி விரலால் அழுத்தி விட ஆண்குறி சரியான நிலையை அடையும்.

22) **வர்மத்தால் பெண்குறி வெளியே தள்ளி விட்டால்** : கூம்பிலிருந்து ஒருவிரல் வலப்புறம் அமர்த்த பெண்குறி தன்னிலை அடையும்.

23) **மூலம் உள்ளே போனால்** : (1) தொப்புளுக்கு நேரே பின்பக்கமுள்ள குறுக்கின் தாரை இசைவுக்குழியில் பிடித்து கீழ் நோக்கித் தாக்க மூலம் வெளிவரும். (2) தொப்புளுக்கு மூன்று விரலுக்கு தாழ்வாக கை பொத்தி அசைத்து கீழ் நோக்கி கறக்கி விட மூலம் இயல்பு நிலைக்கு வரும்.

24) **வர்மத்தால் உள் மூலம் வெளித்தள்ளினால்** : (1) கைக்குழியின் கீழ் காணும் காரை எலும்பைச் சார்ந்த பெரிய நரம்பை அமர்த்த மூலம் தன்னிலையை அடையும். (2) வர்மத்தால் மூலம் நீண்டு போனால் தொப்புளுக்கு நேரே பின்பக்கத்தில் குறுக்கின் தாரை இசைவுக் குழியில் பிடித்து மேல் நோக்கி அமர்த்த மூலம் இயல்பு நிலைக்கு வரும். (3) தொப்புளுக்கு மூன்று விரலுக்கு தாழ்வாக கை பொத்தி அசைத்து மேல் நோக்கி கறக்கி விட மூலம் இயல்பு நிலைக்கு வரும்.

25) **மூலம் நீண்டு போனால்** : கொப்புளுக்கு நேரே பின் பக்கம் குறுக்கின் தாரை இசைவு நேர்சுளியில் பிடித்து மாத்திரை ஊன்றி மேலாக அமத்த மூலம் உயர்ந்து நிரப்பாக வரும். அதன் இதழ் மூன்று வெளியேச் சாடினால் அசாத்தியமாகும். அகவாக்கில் போனாலும் அத்தலத்தின் இசைவுச் சுழியில் பிடித்து விரலூன்றி பதுக்கி கீழாக அசைத்தால் மூலம் சரியாக வரும்.

**26) வர்மத்தால் சலாசயம் அடைத்தால் :** (1) இடது மார்பின் கீழ் மூன்று விரலால் அமர்த்தி தாக்கி விட குணமாகும். அல்லது வலது மார்பின் கீழ் மூன்று விரல் இடம் தாழ்த்தி விரலால் அமர்த்திவிட குணமுண்டாகும். இவ்வாறு செய்தும் இளகாவிட்டால் உள்வர்மம் என அறிந்து வேறு இளக்குமுறை செய்யவும். (2) பெருவிரல் மொழியின் தாழ்வாக நகத்தின் மேல் அருகில் நெல் ஒன்று வைத்து பெருவிரல் கொண்டு அழுத்திவிடவும். மேலும் தொப்புளில் விரலிட்டு அசைக்கவும் கூடவே மூத்திரக்காலத்தில் நெய் பூசி சுண்டு விரலை ஊன்றி பதிக்க சிறுநீர்கழியும். மாத்திரை மிஞ்சிப் போனால் பொல்லாங்கு செய்யும். கவனமுடன் கையாள வேண்டும.

**27) வர்மத்தால் மூத்திரம் வராது அடைத்தால் :** (1) தொப்புளின் கீழ் நான்கு விரல் தள்ளி அழுத்த நீர் இறங்கும். (2) முக்கோணில் நேரே உள்ள இதழில் பிடிக்க மூத்திரம் போகும்.

**28) வர்மத்தால் மலமும் மூத்திரமும் அடைபட்டால் :** (1) மூலாதாரத்தின் மேல் காணும் எலும்பு பொருத்தில், கவனமுடன் விரல் ஊன்றி அழுத்திட மலமும், நீரும் வெளியாகும். (2) தொப்புளில் கைவிரல் கொண்டு மாத்திரை அளவு அழுத்தி கறக்கிவிட சிறுநீரும், பேதியும் போகும். எட்டு நரம்பினுள் உள்ள குற்றமும் சரியாகும். நடுநிலை என்று அழைக்கப்படும் அடங்கலும் இதுவேயாகும்.

**29) வர்மத்தால் மலம் போகாதிருந்தால் :** (1) புட்டி எலும்பின் மேல் மெதுவாக நசுக்கிட மலஜலம் இறங்கும். (2) தொப்புளுக்கு இருவிரல் வலப்பக்கம் விரல்பதிக்க பேதி போகும்.

**30) வர்மத்தினால் மலஜலம் வெளியேறினால் :** (1) தொப்புளில் கைதொடுத்து பிடிக்க மலஜலம் அடைக்கும். (2) முக்கோணின்

நேரே இருக்கும் இதழுக்கும் ஐந்து நெல் வலப்பக்கம் பிடிக்க மூலம் அடைக்கும்.

31) **வர்மத்தால் அடிபட்டு சுவாசம் விட அவதிப்பட்டால்** :உடலில் குத்து அல்லது தாக்கப்பட்டு சுவாசமானது தடைப்பட்டு வருத்தம் கொடுத்தால், மெய்குழி என்னும் நெஞ்சில் காணும் குழியில் விரலால் அமர்த்த சிக்கிய மலமும், மூத்திரமும் வெளிப்பட்டு சுவாசம் சரிவரும்.

32) **வர்மத்தால் வாந்தியுடன் விக்கலெடுத்தால்** : (1) நால்கோணின் இடப்பக்க இதழில் பிடிக்க வாந்தி நிற்கும். (2) வர்மத்தின் காரணமாக வாந்தியும், விக்கலும் நீங்காத சுரமும், உடலில் கண்டால் இடுப்பில் காணும் பெரு நரம்பினை அமர்த்த சுகமாகும். (3) வர்மத்தால் ஒக்காளமும், வாந்தியும் உண்டானால், கைபூஜத்தின் கீழ், சங்குதாரை இரண்டின் நேரே நடுவிரல் பொய்கையில் கையமர்த்திப் பிடிக்க உடனே மாறும். (4) உச்சியில் அமர்த்தி தடவி விட விக்கல், இக்கிள் மாறும். (5) கபமும் சர்த்தலும் (வாந்தி) வந்தால் அடிநாக்கில் இருக்கும் அமிர்த அடங்கலில் அழுத்த வேண்டும்.

33) **வர்மத்தால் வரும் விக்கல் தீர** : தொப்புளில் விரல்பதிக்க விக்கல் தீரும்.

34) **வர்மத்தால் வலிவந்து இழுத்திட்டால்** :உடலில் ஏற்படும் வர்மத்தால் மயக்கத்துடன் வலிவந்து இழுத்திட்டால் பெருவிரல் மொழியின் மேல் அமர்த்திடும் போது சன்னி, வலி இவைகள் மாறும்.

35) **வர்மத்தால் இரத்தம் முறிந்து பாய்ந்தால்** : வர்மத்தால் இரணப்பட்டு இரத்தமானது முறிந்து உடலின் எந்தபாகத்திலிருந்தாவது வெளியே பாய்ந்தால் முழங்காலின்

கீழ் பற்றிக் காணும் நரம்பினை பிடித்து அமர்த்த இரத்தப் பெருக்கெடுத்து வடிதல் கட்டுப்பட்டு நிற்கும்.

36) **கால் முடக்கம் தீர** : கால் முட்டின் அகக்கால் மடக்குப் பகுதியிலும் பெருநரம்பில் கால் குழைச்சியை பலமாகப்பிடித்துக் கொண்டு புளியின் குருவை வைத்துத் தாக்கும் போது சுருக்காக காலை மடக்கும்.

37) **வர்ம சன்னிக்கு :**

(1) **வர்மத்தால் சன்னியுண்டானால்** : முழங்காலில் குதிரை முகம் என்ற வர்மத்தலத்திற்கு சரிவாக உள்ள நரம்பில் பிடிக்க சன்னி குணமாகும். இரண்டு கால்களிலும் ஒன்று போல பிடிக்க வேண்டும்.

(2) **கையடிக்கும் சன்னிக்கு அடங்கல்** : (1) பெருவிரல் அடியிலிருக்கும் குழியிலுள்ள சிறுநரம்பின் மீது விரலூன்றிப் பிடிக்க கை அடிக்கும் சன்னி நிற்கும். (2) முன்கையின் மணிகட்டின் மையத்தில் உள்ள பெருநரம்பின் முனையில் பருத்தியின் விதை வைத்து, பெருவிரலால் ஊன்றிப்பிடிக்க கை வலித்தடிக்கும், சன்னி மாறும்.

(3) **கால் அடிக்கும் சன்னிக்கு அடங்கல்** : (1) மணிக்கட்டின் பின்பக்கத்தின் மத்தியில் குழி ஒன்று உண்டு. அக்குழியில் பருத்தி விதை வைத்து ஊன்றிப்பிடிக்க காலடிக்கும் சன்னி மாறும். (2) காலிலுள்ள தட்டை வர்மத்தலத்தில் பருத்தியின் குருவைத்து அழுத்திவிட சன்னி நிற்கும்.

38) **இளகாத வர்மங்களுக்கு** : மூலத்திலும், அடித்தொடையிலும், தண்டின் உள் அறை இடுக்கிலும் அமர்த்த இளகும்.

39) **செவியில் இரைச்சல் உண்டானால்** : கொக்கிக்கு ஒரு நெல்லுக்கு இடப்பக்கம் அமத்த இரைச்சல் மாறும்.

40) **பின் கைபுஜத்துக்கு கீழேயுள்ள பக்கங்களில் காயம் கொண்டால்** : புறம் கைபடத்திலுள்ள மத்தி குண்டில் பெருவிரலை வைத்து அசைத்துப் பிடித்து ஐந்து விரல்களையும் வலித்துவிட்டு ஊன்றினால் இளகும்.

41) **மூட்டின் இசைவு விட்டுப்போனால்** : இசைவுக்கு மூன்று விரல் கீழே இருக்கிற நரம்பில் அமர்த்தி நரம்பை மேலாக அசைக்க இசைவு ஒத்து நிரப்பிவரும்.

42) **பின் மணிக்கட்டில் இசைவு விட்டுப் போனால்** : புறம் கைபடத்தின் மூன்றாவது விரலின் இசைவில் ஊன்றி மேலாக தள்ளவும். மணிகட்டின் மேல் ஒரு விரல் ஊன்றி கீழாக வலிக்க வேண்டும். புறங்கைமத்திப ஸ்தானத்தின் குண்டின் மேலாக அமர்த்தினால் நிரப்பாகி கைசேரும்.

43) **பின் பெருவிரலின் மொழிஇசைவு விட்டுப்போனால்** : விரலின் நுனியில் விரல் பிடித்து வைத்து மேலாக சொருகித்தள்ளி புறங்கை படத்தில் மணி இசைவுக் குண்டில் ஊன்றி தள்ளினால் மொழியின் துண்டு சேரும்.

44) **பெருவிரலின் மொழி விட்டு விலகினால்** : நகக் கண்ணில் பிடித்து மேலாக சொருகி சேர்த்து விட்டால் மொழிக்குண்டு இசைவின் பொருத்தில் சேரும்.

45) **காலின் சிரட்டை மேல் பாகத்தில் ஏறினால்** : கை உள்ளங்கை பொத்தி பிடித்து துடையின் கால் எலும்பில் அசைத்துப் பிடிக்க சிரட்டை முன் போல் இருப்பில் வரும்.

46) **கரண்டை கண்ணு விலகினால்** :உப்புக் குற்றியின் நரம்பு ஒன்றில் மூன்றுவிரல் பொத்தி குண்டின் மேலாக உந்த கால்படம் திருப்பி அசைத்து மேலாக நெருக்கும் போது சேரும்.

47) **உருளை விலகினால்** : முட்டின் பக்கத்தில் துண்டெலும்பின் நரம்பின் இடையில் பிடித்து பலம் கொண்டு மேலாக சொருகி சேர்க்கவும், குறுக்கின் தாரையில் அசைத்து பிடிக்க உருளை இசைவில் விழும்.

48) **புஜம் நழுகினால்** : முதுகின் தாரை சீப்பு பொருத்திலும் முன் பக்கம் புஜத்திலும், விரல் ஊன்றி அசைத்து கீழாக இழுத்து பின் மேல் விடச்செய்யவும்.

49) **ஆண்களுக்கு பெட்டி மறிந்தால்** : பள்ளையில் கையசைத்து பிடித்து மூலாதாரத்தில் விரலேற்றி கீழாக கறக்கி சுழிக்கவும்.

**பெண்களுக்கு பெட்டி மறிந்தால்** : யோனியின் தானத்தில் கறக்கி சுழிக்கவும், பின் வாய்க்குள்ளும், பொக்கிளுக்கும் ஐந்து விரலுக்கு கீழ் அமர்த்த இளகும்.

50) **சிறுகுடலில் வர்மம் கொண்டு குற்றம் கண்டால்** :உடலை இருத்தி பிடித்து கால் இரண்டும் நீட்டிபிடித்து காலின்படத்தில் சக்கர வர்மத்துக்கு கீழே காலின் அகம்முட்டு மடக்கியும் மேலாக அமர்த்தியும் குறுக்கில் தாரையின் மத்திபத்தின் கீழ் இருப்பில் பிறங்காலால் மாத்திரை வைத்து தட்ட இளகும்.

51) **வர்மத்தினால் நினைவிழந்து போனால்** : மூலத்தின் தாரையின் முனை எலும்பிலும், தொடை அற்றத்திலும், கொப்புளின் மேலும் அமர்த்திட போதம் (நினைவு) உண்டாகும்.
52) **சுரோணிதம் வர** :உச்சி, கைக்குழியின் அகம், தொடையின் பக்கம் இத்தலங்களில் பிடிக்க சுரோணிதம் வரும்.

# வர்ம மருத்துவம் (சிறப்பு)

## பிரிவு-3

## தலை, கழுத்து வர்மநோய்களுக்கு சிறப்பு வர்ம மருத்துவம்

3 : 1 இளக்குமுறை I .

3 : 2 இளக்குமுறைII

3 : 3 இளக்குமுறைIII

### 3 : 1 இளக்குமுறை I :

(வர்ம பீரங்கி-100/வர்ம கண்ணாடி-500)

கண்டத்தின் மேலுள்ள இருபத்தைந்து வர்மங்களுக்கான சிறப்பு வர்ம மருத்துவமாக இது கூறப்பட்டாலும், தலை மற்றும் கழுத்திலுள்ள எல்லா வர்மங்களுக்கும் பொதுவான சிறப்பு வர்ம மருத்துவமாக இதை கையாளலாம்.

### அடங்கல் :

படி-1 : வர்மமுற்ற நோயாளியை எடுத்து உட்கார வைக்கவும்.

படி-2 : உச்சியில் சிறிது முடிக்கற்றையை பிடித்து தூக்கி விடவும்.

படி-3 : உள்தாரை, பிறதாரை ஆகிய இரு பகுதிகளையும் முறைப்படி தடவி ஏந்தி விடவும்.

படி-4 : நாடியை ஏந்திப் பிடிக்கவும்.

படி-5 : பின் பிடரியையும் அசைத்து ஏந்திப் பிடிக்கவும்.

படி-6 : செவி இரண்டிலும் சுக்கைமென்று ஊதி விடவும். இரு

செவியினுள்ளும் நடுவிரலிட்டு அசைத்துவிடவும்.

படி-7 : இரு கால்களையும் அசைத்து ஒன்று சேர்த்து வைக்கவும்.

படி-8 : இரு கைகளையும் மார்புக்கு முன்பாகச் சேர்த்து கட்டி வைக்கவும்.

படி-9 : தோள் இடவலமாக மார்புக்கு அசையும்படி கால்களை மிதித்து தடுத்துக் கொ கொண்டு கீழ் சங்குதிரி வர்ம தலம் அசையும் படி உடலை பக்கத்திற்கு ஓரு ஒரு தடவை வெட்டித் திருப்பி அசைக்கவும்.

படி-10 : மேல் சங்குதிரி தானத்தில் ஒரு விரல் கொண்டு அல்லது கை மணிக்கட்டின் அகப்பக்கம் கொண்டு அல்லது கால் முட்டு கொண்டு அழுத்தி தடவி நாடியை பின்மேல் நோக்கி ஏந்திவிட அசைவு தட்டும் அப்போது சீவன் உண்டாகும்.

## மருந்துகள் :

### தைலம் :

நல்லெண்ணெய், வேப்பெண்ணெய் சமஅளவு எடுக்கவும். மிளகு, சுக்கு, வெள்ளுள்ளி, வசம்பு, கஸ்தூரி மஞ்சள், கருஞ்சீரகம், தேவதாரம், கச்சோலம், சாதிக்காய், சமஅளவு எடுத்து பொடித்து எண்ணெயில் போட்டு காய்ச்சி பருவத்தில் வடித்து காலை, மாலை இருநேரம் தலைக்கும் தேய்த்து, உடலிலும் மெழுகி அடங்கல் முறைப்படி தடவி, சங்குதிரி அடங்கலில் திருகி அசைக்க கண்டத்துக்கு மேலுள்ள வர்மங்களெல்லாம் குணமாகும்.

### நாவிச்சட்ட ஏண்ணெய் :

சுக்கு, அரத்தை, தேவதாரம், கொட்டம், சந்தனம், செஞ்சந்தனம், இருவேலி, செண்பகப்பூ, பச்சை, மதுரம், பூவாத்து, தக்கோலம், சடாமாஞ்சி, மஞ்சள், சதகுப்பை, வெட்பாலரிசி,

சீரகம், இலவங்கம், மிளகு, ஏலம், வாய்விடங்கம், அகில், நன்னாரி, திப்பிலி, முத்தக்காசு, வகைக்கு கழஞ்சி இரண்டு, நாவி (புனுகு) சட்டம் இரண்டு கழஞ்சி, எலுமிச்சம் பழச்சாறு இரண்டுபடி, நல்லெண்ணெய் இரண்டுபடி, கற்கவகைகளை தூளாக்கி, சாற்றை அடுப்பிலேற்றி எரித்து, எண்ணெய் முதல் மருந்தும் தூவி, பதத்தில் இறக்கி வடிக்கவும். வடிபாத்திரத்தில் நாவிச்சட்டத்தைப் போடவும் இத்தைலத்தை தலைக்கு தேய்த்து முழுகி வரவும். இதனால் சிரசு வர்மம், உடல் வறட்சை, பொல்லாத உள்வர்மம், கண்ணீர் வடிதல், கொழூத்து வலி, உடல் உறுப்பில் நீர் கோர்த்தல் இவை குணமாகும். உடலுக்கு நிறமுண்டாகும். உடல் தணுத்து வலுக்கும். தாது பலம் உண்டாகும்.

## 3 : 2 இளக்குமுறை II :

வர்ம ஒடிவு முறிவு சரசூத்திரம்-703/1200)

### அடங்கல் :

படி-1 : நோயாளியின் அருகில் சென்று சாத்திய அசாத்திய கூறுகளை ஆய்வு செய்ய வேண்டும்.

படி-2 : வாய்வழி சுவாசம், நீரில்லாது வறண்ட கண்கள், கண் மஞ்சளித்து அல்லது சிவப்பாய் மாறியிருத்தல், இந்திரியகறுத்துக்காணல் போன்ற இக் இக்குறிகுணங்கள் அசாத்தியமாகும். இக்குறிகுணங்கள் இல்லாவிட்டால் இள இளக்குமுறை செய்யலாம்.

படி-3 : கீழ் நாடியை ஏந்திப்பிடித்து அடங்கல் செய்ய வேண்டும்.

படி-4 : சுழியில் விரலூன்றி கோரிப்பிடிக்க வேண்டும்.

படி-5 : நோயாளியின் உடலை மருத்துவர் உடலோடு அணைத்து, அக சுவாசத்தை அடக்கிப் பிடித்து அலவு, கீழ்நாடி, மேல் மோண், புரிகம் இவற்றில் தடவ கண் விழிக்கும். வர்மம் இளகும்.

படி-6 : சிரசில் வர்ம எண்ணெய் தேய்க்க வேண்டும். (சரசூத்திரம்-925/1200)

படி-7 : பொறியசைந்து, கழுத்து விறைத்து, தேகம் கோணி, கைகள் அசையாமல், கண்மூடி சன்னி வந்தால் அசாத்தியம் என்றறிந்து மருத்துவம் செய்யாது விலகி நிற்கவும்.

படி-8 : என்றாலும் இதை இளக்க வேண்டுமானால் நோயாளியின் முதுகில் மருத்துவர் தமது இடக்காலால் ஊன்றிப் பிடிக்கவும்.

படி-9 : கைக்குழியின் பிறைசுழியில் விரலூன்றி அமர்த்தும் போது கண்கள் திறக்கும்.

படி-10 : கண்கள் திறந்தாலும் காயம் பலமாகக் கொண்டிருந்தால் ஏழாம் நாள் உயிர் பிரியும்.

## மருந்துகள் :

### சிரசில் தேய்க்க எண்ணெய் :

(வ.ஒ.மு சரசூத்திரம்-925/1200) குக்கில் கூகை நீறு, வெள்ளாத்தி, கொம்பரக்கு, கடுகு ரோகிணி, பஞ்சாரை வகைக்கு கழஞ்சி மூன்று எடுத்து பொடித்து வைக்கவும். மலைதாங்கி சாறு, பருத்தியிலை சாறு இவற்றுடன் தேங்காய் எண்ணெய் ஒரு நாழி சேர்த்து அனல் மூட்டி பருவத்தில் வடித்து தலைக்கு தேய்த்து வந்தால் தலையிலுண்டான வர்ம நோய்கள் யாவும் குணமாகும்.

### கண்டத்தின் மேலுள்ள வர்மத்துக்கு கசாயம் :

(வர்ம ஒடிவு முறிவு சரசூத்திரம்-1143/1200) கருங்குடங்கல், நஞ்சறுத்தான், முத்தக்காசு, வகைக்கு பலம் ஒன்று. கொம்பரக்கு, அமுக்கூரம், கண்டங்கத்தரி, இஞ்சி, சிறுபுனலரிசி, திப்பிலி

வகைக்கு ஆறு கழஞ்சி முறைப்படி கஷாயமிட்டு ஐந்து நாள் பத்து வேளை அருந்தவும்.

**சிரசுகாய ஏண்ணெய் :**

(வ.ஒ.மு. சரசூத்திரம்-917/1200) கரிசாலை சாறு படி ஒன்று, தேங்காய் எண்ணெய் படி ஒன்று, இலுப்பைக்கட்டி, மிளகு வகைக்கு கழஞ்சு மூன்று, கருஞ்சீரகம், அரத்தை, வேம்பாடம் பட்டை வகைக்கு கழஞ்சு ஒன்று, எட்டிகொழுந்து இடித்த விழுது புன்னைக்காய் அளவு கடைச்சரக்கை இடித்து பொடித்து ஒன்றாகக் கலந்து அனல் மூட்டி மணல் பருவத்தில் வடிக்கவும். இதை சிரசில் மெழுகி வர சிரசிலடி காயம் இவற்றாலுண்டான காய்ச்சல், பீனிசங்கள், சன்னி வெட்டு, காதடைப்பு, மண்டையிடி, குத்து, உளைவு எல்லாம் தீரும்.

## 3 : 3 இளக்குமுறை III :

(வர்ம ஒடிவு முறிவு சாரி-82/1500, வர்மசாரி-69/205)

கண்டத்தின் மேலுள்ள முப்பத்தேழு வர்மங்களுக்கான சிறப்பு வர்ம மருத்துவமாக இது கூறப்பட்டாலும், தலை மற்றும் கழுத்திலுள்ள எல்லா வர்மங்களுக்கும் பொதுவான சிறப்பு வர்ம மருத்துவமாக இதைக் கையாளலாம்.

**அடங்கல் :**

படி-1 : வர்மம் கொண்டவரை எடுத்து உட்கார வைக்கவும்.

படி-2 : வர்மமுற்ற நோயாளியின் பின்னால் நின்று கொண்டு நோயாளியின் கைகளைப் பற்றிக் கொண்டு வலதுபுறமாக வெட்டித்திருப்பவும். பின்னர் இயல்பு நிலைக்கு கொண்டு வரவும்.

படி-8 : வட்டமாய் முதுகு வரியில் தடவி விடவும்.

படி-9 : வலம்புரியும், இடம்புரியும் திரித்துக் கட்டவும்.

படி-10 : அடங்கலில்தகுந்த மாத்திரை அளவு அழுத்தம் உட்செலுத்த வர்மம் இளகும்.

## மருந்துகள் :

-

## கழுத்துக்கு மேலுள்ள வர்மத்துக்கு எண்ணெய் :

(வில்லிசை கைவல்லியம்-300) வெள்ளறுகு, தோடைவேர், அடபொதியன், விராலிவேர், நின்பபழம், மருக்கரை வேர் வகைக்கு கழஞ்சி மூன்று. நான்குபடி நீரில் இட்டு காய்ச்சி நாழியாக்கி இறுத்து கொம்பரக்கு, சிங்கி, முத்துச்சிப்பி, ஏலம், கடுகுரோகினி, கஸ்தூரி மஞ்சள், சூடம், வெண்காரம், சவ்வாது, புனுகு, வகைக்கு கழஞ்சு ஒன்று சமுத்திராப்பழம் கழஞ்சு மூன்று, நின்பம் எண்ணெய் உரி, தேங்காய் எண்ணெய் உழக்கு, ஆவின் நெய் உழக்கு. மருந்தை கிழாயத்திலரைத்து காய்ச்சி மணல் பருவத்தில் வடித்து தலைக்கு தேய்த்து வென்னீரில் குளித்துவர கண்டத்துக்கு மேல் உள்ள வர்மங்கள் யாவும் தீரும்.

## கழுத்துக்கு மேலுள்ள வர்ம காயம் வலி, விச நீர், நரம்பு சுளுக்கு, கொழுத்துக்கு எண்ணெய் :

(வில்லிசை கைவல்லியம்-300) நஞ்சறுத்தான் வேர், ஆடுதீண்டாபாளை, அறுகன் வேர், குன்னி வள்ளி, குறுந்தோட்டி, மிளகு தான்றி, கருஞ்சூரைப்பட்டை, கூவிளம் வேர், ஆவாரம் பட்டை, பிரம்மி வேர், முடக்கொத்தான், காக்கலம் வேர், பூவரசின் பட்டை வகைக்கு பலம் அரை. அத்துடன் கார்கோலரி,

சிங்கி, மதுரம், திறிகடுகு, தாளிசபத்திரி, நெல்லிக்காய், வகைக்கு கழஞ்சி மூன்று, கருங்கோழி ஒன்று துட்டு நீக்கி இடித்து சேர்த்து மருந்துகளை அரைத்து சேர்த்து 5 இடங்கழி வெள்ளம் சேர்த்து வற்றவைத்து 3 நாள் ஆறு வேளை சாப்பிடவும். கழுத்துக்கு மேலுள்ள விஷ நீர், வர்மங்கள், காயங்கள், நரம்பு சுளுக்கு, கொழுத்து இவைகள் தீர்ந்து சுகமாகும்.

## சிவராதி ஏண்ணெய் :

(வ.ஞா.ஒ.மு. சரசூத்திரம்-2200) சிரசில் வென்னீரில் குளிக்க வேண்டும். சிரசு வர்ம நோய்கள், தீராத பீனிசம், தலைவலி, மண்டைசூலை, மூக்கில் இரத்தம் வடிதல், உள் தளர்ச்சை, நரம்பு பிடி, நரம்பு தெற்றல், சென்னியிடி, கொழுத்து, சுளுக்கு, கபநாற்றம், தந்த ரோகம், இருமல், ஏங்கல், தூக்கம், இவை குணமாகும். முன்பக்கமும், பின்பக்கமும் மேலிருந்து கீழாகத் தடவித்தாழ்த்தவேண்டும்.

படி-3 : வாரி எனும் இரு விலாப்பகுதிகளிலும் மேலிருந்து கீழாகத் தடவித்தாழ்த்தி அமர்த்தல் செய்யவேண்டும்.

படி-4 : நோயாளியைச் சுற்றிலும் திரைவளைத்து குறியான நரம்புகள் எல்லாவற்றையும் வலித்துப் பின்னல் செய்ய வேண்டும்.

படி-5 : நோயாளியின் கைகளிரண்டையும் முன்பக்கமாகக் கட்டவும்.

படி-6 : மருத்துவர் தனது வலதுகாலால் நோயாளியின் வலது தொடையை அழுத்தி மிதித்து, நோயாளியின் கைகளைப் பற்றிக்கொண்டு இடப்பக்கமாக வெட்டித் திருகவும் பின் இயல்பு நிலைக்கு கொண்டு வரவும்.

படி-7 : இதைப் போலவே மருத்துவர் தனது இடது காலால் நோயாளியின் இடது தொடையில் மிதித்து அழுத்தம் கொடுத்து நோயாளியின் தலை, கழுத்து வர்மத்துக்கு கஷாயம் :

**கஷாயம் I :**

வழுதனை வேர், கெருடகொடி, செம்பருத்தி பட்டை, குட்டித்தக்காளி, கொடுவேலி, இசங்குப்பட்டை, வகைக்கு கழஞ்சி ஆறு, திப்பிலி, கண்டங்கத்திரி, அமுக்கூரம், தான்றிக்காய், இலவங்கம், சிறுதேக்கு வகைபலம் அரை, ஐந்து நாழி நீரில் காய்ச்சி மூன்று உழக்கு ஆக்கி, ஒரு நேரம் 3 நாள் 6 வேளை குடிக்க முன் சொன்ன வர்மங்கள் தீரும்.

**கஷாயம் II :**

வெள்ளை குன்னிவேர், இஞ்சி, சிவனார் வேம்பு, நெருஞ்சில், காந்தம், தாளைவிழிர், நாவல்பட்டை வகைக்கு கழஞ்சி மூன்று ஓமம், கடுகு, யாளியா, நாகப்பூ, செண்பக மொட்டு, கிளியூறல் பட்டை வகைக்கு கழஞ்சி 4, ஐந்து நாழி நீரில் காய்ச்சி மூன்று உழக்கு ஆக்கி, ஆழாக்கு வீதம் 3 நாள் 6 வேளை குடிக்க சிரசில் கொண்ட காயங்கள் தீரும்.

## கழுத்துக்கு மேலேயுள்ள முறிவுகளுக்கு ஒற்றடம் :

-

**ஒற்றடம் I :** முருங்கைப்பூவும், மலைதாங்கியும் சதைத்து கிழிகெட்டி நல்லெண்ணெயில் வேக வைத்து ஒற்றவும்.

**ஒற்றடம் II:** முருங்கைக் கொழுந்து, அமுக்கூரம், சுக்கு, கருஞ்சீரகம், சமமாக குமரி சாற்றில் அரைத்து கிழிகட்டி நல்லெண்ணெயில் வேக வைத்து ஒற்றவும்.

**ஒற்றடம் III:** முருங்கை கொழுந்து, வெள்ளை கொடுவேலி, ஏலம், உள்ளி, சதைத்து கிழிகட்டி நல்லெண்ணெயில் வேகவைத்து ஒற்றடமிட தராதரம் போல கிழிவு வசவுகேடு குணமாகும்.

**ஒற்றடம் IV:**ஏலம், சீரகம், கொடுப்பை சமமாக எடுத்து சதைத்து கிழிகட்டி நீரில் கிழி பிடித்து முறிவில் ஒற்றடமிடவும்.

## கழுத்துக்கு மேலேயுள்ள முறிவுகளுக்கு பற்று :

-

பற்று I : கெருடக்கொடிக் கிழங்கு, தென்னம்பூ, சதகுப்பை, ஓமம், வற்றல், நல்லெண்ணெயில் அரைத்து முறிவிலிடவும்.

**பற்று II:** திருகுகள்ளி வேர், காணம் பிரண்டைக் கொழுந்து, கார்கோல், சீரகம், ஓமம் சமனெடை எடுத்து தேங்காய் பாலில் காய்ச்சி கடுகு பதத்தில் வடித்து முறிவிலிடவும்.

**பற்று III:** சிவதையை பொடித்து சீனியில் கலந்து முறிவில் பற்றிடவும்.

## தலை மற்றும் கழுத்து வர்மநோய்களுக்கு சிறப்பு வர்ம மருத்துவம்

### 3 : 1 இளக்குமுறை I :

(வர்ம பீரங்கி-100/வர்ம கண்ணாடி-500)

கண்டத்தின் மேலுள்ள இருபத்தைந்து வர்மங்களுக்கான சிறப்பு வர்ம மருத்துவமாக இது கூறப்பட்டாலும், தலை மற்றும்

கழுத்திலுள்ள எல்லா வர்மங்களுக்கும் பொதுவான சிறப்பு வர்ம மருத்துவமாக இதை கையாளலாம்.

## அடங்கல் :

படி-1 : வர்மமுற்ற நோயாளியை எடுத்து உட்கார வைக்கவும்.

படி-2 : உச்சியில் சிறிது முடிக்கற்றையை பிடித்து தூக்கி விடவும்.

படி-3 : உள்தாரை, பிறதாரை ஆகிய இரு பகுதிகளையும் முறைப்படி தடவி ஏந்தி விடவும்.

படி-4 : நாடியை ஏந்திப் பிடிக்கவும்.

படி-5 : பின் பிடரியையும் அசைத்து ஏந்திப் பிடிக்கவும்.

படி-6 : செவி இரண்டிலும் சுக்கைமென்று ஊதி விடவும். இரு செவியினுள்ளும் நடுவிரலிட்டு அசைத்துவிடவும்.

படி-7 : இரு கால்களையும் அசைத்து ஒன்று சேர்த்து வைக்கவும்.

படி-8 : இரு கைகளையும் மார்புக்கு முன்பாகச் சேர்த்து கட்டி வைக்கவும்.

படி-9 : தோள் இடவலமாக மார்புக்கு அசையும்படி கால்களை மிதித்து தடுத்துக் கொ கொண்டு கீழ் சங்குதிரி வர்ம தலம் அசையும் படி உடலை பக்கத்திற்கு ஒரு ஒரு தடவை வெட்டித் திருப்பி அசைக்கவும்.

படி-10 : மேல் சங்குதிரி தானத்தில் ஒரு விரல் கொண்டு அல்லது கை மணிக்கட்டின் அகப்பக்கம் கொண்டு அல்லது கால் முட்டு கொண்டு அழுத்தி தடவி நாடியை பின்மேல் நோக்கி ஏந்திவிட அசைவு தட்டும் அப்போது சீவன் உண்டாகும்.

## மருந்துகள் :

**தைலம்** :

நல்லெண்ணெய், வேப்பெண்ணெய் சமஅளவு எடுக்கவும். மிளகு, சுக்கு, வெள்ளுள்ளி, வசம்பு, கஸ்தூரி மஞ்சள், கருஞ்சீரகம், தேவதாரம், கச்சோலம், சாதிக்காய், சமஅளவு எடுத்து பொடித்து எண்ணெயில் போட்டு காய்ச்சி பருவத்தில் வடித்து காலை, மாலை இருநேரம் தலைக்கும் தேய்த்து, உடலிலும் மெழுகி அடங்கல் முறைப்படி தடவி, சங்குதிரி அடங்கலில் திருகி அசைக்க கண்டத்துக்கு மேலுள்ள வர்மங்களெல்லாம் குணமாகும்.

**நாவிச்சட்ட ஏண்ணெய் :**

சுக்கு, அரத்தை, தேவதாரம், கொட்டம், சந்தனம், செஞ்சந்தனம், இருவேலி, செண்பகப்பூ, பச்சை, மதுரம், பூவாத்து, தக்கோலம், சடாமாஞ்சி, மஞ்சள், சதகுப்பை, வெட்பாலரிசி, சீரகம், இலவங்கம், மிளகு, ஏலம், வாய்விடங்கம், அகில், நன்னாரி, திப்பிலி, முத்தக்காசு, வகைக்கு கழஞ்சி இரண்டு, நாவி (புனுகு) சட்டம் இரண்டு கழஞ்சி, எலுமிச்சம் பழச்சாறு இரண்டுபடி, நல்லெண்ணெய் இரண்டுபடி, கற்கவகைகளை தூளாக்கி, சாற்றை அடுப்பிலேற்றி எரித்து, எண்ணெய் முதல் மருந்தும் தூவி, பதத்தில் இறக்கி வடிக்கவும். வடிபாத்திரத்தில் நாவிச்சட்டத்தைப் போடவும் இத்தைலத்தை தலைக்கு தேய்த்து

முழுகி வரவும். இதனால் சிரசு வர்மம், உடல் வறட்சை, பொல்லாத உள்வர்மம், கண்ணீர் வடிதல், கொழுத்து வலி, உடல் உறுப்பில் நீர் கோர்த்தல் இவை குணமாகும். உடலுக்கு நிறமுண்டாகும். உடல் தணுத்து வலுக்கும். தாது பலம் உண்டாகும்.

# எலும்பு மூட்டு மருத்துவம்

## பிரிவு 1

## அறிமுகம்

எலும்பு மூட்டு மருத்துவம் (Orthopaedics) மனிதன் தோன்றிய காலத்திலிருந்தே பல பரிணாமங்களில் வளரத் தொடங்கியிருக்க வேண்டும். காரணம் மனிதன் பிறந்து இயற்கையோடு ஒன்றியும், அதை எதிர்த்துப் போராடியும் வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டிய கட்டாய சூழலில், அன்றாடம் அவன் சந்திக்கும் விபத்துக்களினாலும், மேற்கொள்ளும் ஆபத்துக்களினாலும், பாதுகாப்புக்கும், உணவுக்குமாக தான் நடத்தும் பேராட்டங்களினாலும் உடலில் பெறப்படும். பல்வேறு காயங்களைப் பற்றியும், அதன் தன்மைகள் மற்றும் குணப்படுத்தும் வழிமுறைகள் பற்றியும் சிந்திக்கத் தொடங்கிய நாட்களிலேயே இம்மருத்துவம் துளிர்விடத் தொடங்கிவிட்டது.

நவீன மருத்துவத்திலும் இது போன்ற நீண்ட பயணத்தில், நிக்கோலஸ் அன்ட்ரே என்ற பிரஞ்சு மருத்துவர் (1741) ஆர்த்தோபெடிக்ஸ்(Orthopaedics) என்ற வார்த்தையை உருவாக்கினார். இதில் “Ortho” என்றால் நேரான (Straight) எனவும்,Paedics” என்றால் குழந்தை (Child) எனவும் பொருள்படும். அதாவது குழந்தைகளுக்குண்டான வளைந்த எலும்பு குறைபாடுகளை நிமிர்த்துவதே இத்துறையின் வேலை என நிக்கோலஸ் அன்ட்ரே ஆரம்ப காலத்தில் நம்பினார். எனவே அவர் இத்துறைக்கு இப்பெயரை வைத்தார். அதுவே இத்துறைக்கு பெயராக அமைந்துவிட்டாலும் பிற்காலத்தில் ஆர்த்தோபெடிக்ஸ் துறை எலும்பு முறிவு, மூட்டு விலகல், எலும்பு நோய்கள் என தன்துறையை

பலப்படுத்தியது. மயக்க மருந்துகளின் கண்டுபிடிப்புக்குப் பின்னர் இத்துறை அசுரவளர்ச்சி கண்டது. ரோன்ஜென்-னால் X-கதிர் கண்டுபிடிக்கப்பட்ட பின்னரும், அல்பெர்ட் மேத்திசென்-னால் (1852) POPஎனும் Plaster of Paris -ம் கண்டு பிடிக்கப்பட்ட பின்னரும் இத்துறை மேலும் முன்னேறியது. CTஸ்கேன் மற்றும் MRIஸ்கேன்-ன் அறிமுகத்துக்குப் பின்னர் அது மிக நுட்பமாக வளரத்தொடங்கியது. தற்போதைய நவீன அறுவை நுட்பங்கள் எலும்பு மூட்டு மருத்துவத் துறையில் பெரும் புரட்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஆயினும், நமது நாட்டிலும் போரும் வீரமும் செறிந்த சூழலில் காயங்களுக்கும் பஞ்சமில்லைதானே. அரசர்களின் ஆட்சி காலத்திலிருந்தே இம்மருத்துவமே கோலோச்சி நிற்கிறது. வீரம்-போர்-வெற்றி என்ற வரிசையை வெளியரங்கமாய் பரணிபாடும் சங்கத்தமிழில், காயம்- ஊனம்-மருத்துவம் என்ற வரிசை உள்ளரங்கமாக்கப்பட்டு பரண்களில் வைத்து பாதுகாக்கப்பட்டதே இம்மருத்துவம் அதிகம் வளராமல் போனதற்கு காரணமாக இருக்கலாம். என்றாலும் X-கதிரும், CT, MRI ஸ்கேனும் இல்லாத மிகப்பழங்காலத்தே நம் முன்னோர்களுக்கிருந்த காயத்துக்கான சிகிச்சை முறைகளையும், எலும்புகள் மற்றும் பொருத்துக்களின் தன்மை, முறிவு, குணப்படுத்த இயலும்-இயலா நிலைகள், பாதுகாப்பு விதிமுறைகள் பொருத்து முறைகள், கட்டுமுறைகள், அவதிகள், சிக்கல்கள், குணமாகும் நாளளவுகள், மருந்துகள் பற்றிய விரிவான அறிவை எண்ணிப் பார்க்கும் போது வியப்பே விஞ்சுகிறது. சித்த மருத்துவத்தின் இந்த எலும்பு-முறிவு மருத்துவத்துறையின் நுணுக்கங்கள் ஆராயப்படுமென்றால் இன்னும் பல அரிய மருத்துவ நுட்பங்களை மனித சமுதாயத்திற்கு வழங்க இயலும்.

நம் முன்னோர்கள் இந்த மருத்துவத்தை 'ஒடிவு-முறிவு மருத்துவம்' என்றே அழைக்கின்றனர். இதற்கு "Fracture-Injury" எனப்பொருள். அதாவது எலும்பின் முறிவுகளையும், நரம்பின் காயங்களையும் பற்றி அறிந்து மருத்துவம் செய்யும் கலையாகும்.

## காயம்(Trauma):

-

ஒரு விசை உடலுக்கு ஊறுவிளைவிக்கிற போது காயம் (Injury)ஏற்படுகிறது. அது தோல், தசை, நாண்கள், சவ்வுகள், பொருத்துக்கள், எலும்புகள், நரம்புகள் என எல்லா உறுப்புக்களையும் பாதிப்பனவாக உள்ளது.

## வர்ம காயம்(Varma-Trauma):

-

ஒரு விசையினால் வர்ம தலங்களிலும் காயம் பட்டு அதற்குண்டான நோய் குறிகுணங்களும் தோன்றுமெனில் அதை வர்ம காயம் எனலாம்.

## I. எலும்பு-மூட்டு மருத்துவம் (ORTHOPAEDICS)

எலும்பு-மூட்டு மருத்துவத்தை இரண்டாக பகுத்துப் படிக்கலாம்.

அவை:

1) காய-எலும்பு மூட்டு மருத்துவம் (Traumatic Orthopaedic disorders)

2)காயமற்ற-எலும்பு மூட்டு மருத்துவம் (Non-Traumatic Orthopaedic disorders)

இதில், முதல் வகையில் எலும்பு முறிவுகள், மூட்டு விலகல்கள் போன்றவற்றைக் கொண்டு வரும் காயங்களும் அதற்குண்டான பரிகாரங்களும் கூறப்பட்டுள்ளது. மேலும் புறக்காயமின்றி, உடலிலுண்டான நோய் கூறுகளின் விளைவாக ஏற்படும் எலும்பு மற்றும் மூட்டு பிரச்சனைகளும் அதற்குண்டான தீர்வுகளும் இரண்டாம் வகையில் கூறப்பட்டுள்ளது. காயங்களால் உண்டாகும் எலும்பு-மூட்டு சீர்கேடுகளுக்கு (Traumatic Orthopaedic disorders) செய்யப்படும் மருத்துவ முறைகளையே ‘வர்ம ஒடிவு முறிவு மருத்துவம்’ என்கிறோம்.

ஒடிவுகள்(Fractures):எலும்புகளில் சிறு கீறல் விழுதல் அல்லது முற்றிலும் முறிந்து துண்டாதலே ஒடிவுகள் எனப்படுகிறது. தற்போது எல்லாஎலும்பு ஒடிவுகளும் முறிவு என்றே அழைக்கப்படுகிறது.

முறிவுகள்(Injuries):முறிவு என்பதை ‘தொடர்பு முறிந்து போதல்’ அல்லது ‘துண்டாகிப் போதல்’ எனக் கொள்ளலாம். பொதுவாகக் எலும்பு ஒடிதலை முறிவு எனக் கூறினாலும், முறிவு என்பதை ‘காயம்’ (Injury)என்ற அர்த்தத்திலும் வர்ம மருத்துவ நூல்களில் கையாண்டுள்ளனர். (உ.ம். நரம்பு முறிவுகள்- Nerve Injury)

விலகல்கள்(Dislocations): எலும்பு ஒன்றோடொன்று முட்டி நிற்கும் எலும்பு முட்டு அல்லது மூட்டின் பொருத்தில் காயம் ஏற்பட்டு சந்தித்துக் கொண்டிருக்கும் எலும்புகள்

ஒன்றிலிருந்து ஒன்று முற்றிலும் விலகிச் செல்வதே 'விலகல்' எனப்படும்

நழுவல்கள்(Subluxations): எலும்பு முட்டுக்கள் அதிக அளவு விலகாமல் ஒன்றிலிருந்து ஒன்று சற்றே நழுவிப் போவதே நழுவல் எனப்படும்.

முறிந்து விலகல்(Fracture dislocation):எலும்பு முறிந்து அதன் முனைகள் ஒன்றிலிருந்து ஒன்று விலகிச் செல்லுவதே முறிவு-விலகல் எனப்படும்.

தசை-சுளுக்கு (Strain) : தசை அல்லது தசை நாண் இணைப்புகள் அதிகம் விரிக்க அல்லது நீட்ட அல்லது இழுக்கப்படும் போது (Stretch)ஏற்படும் காலமே தசை சுளுக்கு எனப்படுகிறது. இதைத்தொடர்ந்து தசை சிதைவு (Muscle rupture) ஏற்படுகிறது.

சவ்வு-சுளுக்கு(Sprain):சவ்வுகளில் ஏற்படும் காயங்களே (injury)சவ்வு சுளுக்கு (Sprain)எனப்படுகிறது. காயங்களால் சவ்வின் நாரிழைகள் கிழிக்கப்படுவதால் சவ்வுக் கிழிவு (Ligament tear)எனவும் அழைக்கப்படுகிறது.
வர்ம மருத்துவ நூல்கள் காயங்களால் உடலில் என்னென்ன நிகழ்வுகள் ஏற்படுகின்றன?. அதன் விளைவாக முடங்கள் எவ்வாறு தோன்றுகின்றன. குணப்படுத்த இயலாத அசாத்திய காயங்கள் என்னென்ன? அசாத்திய குறிகுணங்கள் யாவை? என்பனவற்றையும், இவ்வாறான நோயர்களை வர்ம மருத்துவத்தில் சிகிச்சை செய்யாது அவசர சிகிச்சைக்காக நவீன மருத்துவத்துறைக்கு அனுப்பி வைக்க வேண்டுமென்ற சூசக தகவலையும், சாத்திய காய குறிகுணங்களையும் தெளிவாக விளக்குகின்றன.

# வர்மமும் காயத் தலங்களும்

## வர்மம் (Varmam)

வர்மம் என்பதை "வன்மம்" என்றும் "மர்மம்" என்றும் கூறுவர். அதாவது வன்மையான வாசி என்னும் பிராணன் உடலில் பரவிநின்று, பல்வேறு செயல்களை தங்கு தடையின்றி செயல்படுத்தும் விந்தையான செயல்.

*"உடலுயிர் நாடி தன்னில் உந்திடும் வாசியதாம்*

*ஊனுடல் மருவியே ஊடாடும் நிலையே வர்மம்"*

*(வர்ம சர நூல் 7,16)*

"உடலின் உயிர்நாடிகளில் ஓடிக் கொண்டிருக்கும் வாசி என்னும் பிராணன் உடலில் பரவி ஊனோடு ஒன்றி நிற்கும் நிலையே வர்மம் ஆகும்".

*"காணுகின்ற கேசாதி பாதமெங்கும்*

*கதித்தோடும் வாசி நிலை வர்மமாச்சே"*

*(வாகட நிதானம்)*

## வர்ம தலங்கள் (Varma Sites)

உடலில் பரவி இயங்கிக் கொண்டிருக்கும் வாசி என்னும் பிராணனின் ஓட்டம், உடலின் குறிப்பிட்ட தலங்கள் தாக்குதலுக்குள்ளாவதன் மூலம் தடை செய்யப் படுகிறது. அவ்வாறு தடை செய்ய வல்ல இடங்களை வர்மத்தலங்கள்

என்கிறோம். இத்தலங்களை அழுத்திப் பார்த்தால் மிகவும் வலிக்கும்.

*"இப்படி சொல்லுகின்றவிவ் வகை வன்மம் தானும்*

*மெய்ப்படி அழுக்கிப்பார்த்தால் மிகவும் நொந்திருக்கும்"*

*(வர்ம விதி)*

இந்த வர்ம தலங்களே வர்மம் என்ற பெயரால் இன்று புழக்கத்தில் இருந்து வருகிறது.

*"வாசி தட்டும் தலமெல்லாம் வர்மம்"*

*(வர்ம ஒடிவு முறிவு சர சூத்திரம் - 1200)*

**அடங்கல் (Adankal)**

வர்ம தலங்களில் தாக்கம் (காயம்) ஏற்படும் போது, வாசி என்னும் பிராண ஓட்டம் தங்கு தடையின்றி ஓட இயலாமல், சில இடங்களில் அடங்கி கிடந்து விடுகிறது. இவ்விடங்களே "அடங்கல்" என்றும் "அடங்கல் தலங்கள்" என்றும் அழைக்கப்படுகிறது.

*"உடலுயிர் நிலை யதனில் உந்துமோர் தாக்குதலால்*

*ஊடாடும் வாசி தடையால் அடங்கிடும் தலமே யடங்கல்"*

*(வர்ம சர நூல் 7,16)*

## வர்ம நோய் (Varma Disease)

தடைபட்ட வாசி என்னும் பிராணன், அடங்கல் தலங்களில் அடங்கி கிடந்து விட்டால், குறிப்பிட்ட வர்ம தலங்கள் வழியாக இயங்கி கொண்டிருக்கும் வாசி என்னும் பிராணன் தடைபட்டு விடுகிறது. இதன் விளைவாக நோய் ஏற்படுகிறது. இந்நோய் "வர்ம நோய்" எனப்படுகிறது. இவ் வர்ம நோய், தாக்கப்பட்ட வர்ம தலம், விசையின் அளவு, ஆகியவற்றைப் பொறுத்து அமைகின்றது. இந்நோயில் தலைச் சுற்றல், வியர்வை, அசதி, மூச்சு திணறல், நடுக்கம், நெஞ்சுபடபடப்பு, வாந்தி, மூர்ச்சை, சன்னி, மயக்கம் போன்ற உடன் விளைவுகள் தோன்றுகின்றன. சில வேளைகளில் மரணமும் ஏற்படுகிறது.

## இளக்குமுறை (Manipulation Technique)

இந்த வர்ம நோயை சீர் செய்ய வேண்டுமானால் அடங்கி கிடக்கும் வாசி என்னும் பிராணனை எழுப்பி விடவேண்டும் அவ்வாறு எழுப்பி விடும் செய்கையே "இளக்குமுறை" ஆகும். இளக்குமுறை செய்வதையே "அடங்கல் செய்தல்" என்று கூறுவாரும் உண்டு.

பொதுவாக மனித உடலில் மர்மமாக மறைந்திருக்கும் வாசி என்னும் பிராணனின் இயல்பான இயக்கத்தில் உண்டாகும் தன்னிலை வேறுபாட்டால் ஏற்படும் மாற்றங்களையும், அதற்கான காரணங்களையும் வர்மம் என்பர்.

## வர்ம காயம்

வர்ம காயம் என்பது குறிப்பிட்ட தலத்தில், குறிப்பிட்ட வேகத்தில், குறிப்பிட்ட அல்லது எல்லா காலத்திலும் தாக்குதல் ஏற்படும் போது நிகழும் அபாயகரமான உடலியக்க மாறுபாடுகளாகும். வர்ம காயம் கொண்ட உடனே சரம் மாறி, வியர்வை தோன்றி, அனல் மீறி, கபம் விருத்தியடைந்து அதன்

பலனாக சன்னி ஏற்பட்டோ, சன்னி ஏற்படாமலோ உணர்விழக்க நேரிடும்.

## சரம்

சரத்தின் நுட்பங்களை அறிந்து கொள்வதே வர்ம மருத்துவத்தின் அடிப்படைக் கல்வியாகும். சரம் என்றால் இயக்கம் (motion)என்றும், கோர்வை (Series) என்றும், சுவாசம் (Breath) என்றும், மாலை என்றும் பொருள்படும். இதில் மாலை என்பது வெறும் மாலையைக் குறிக்காமல் ஒரு சுற்றோட்டத்தை (Circulation) குறிக்கிறது. ஆக சரம் என்றால் வாசியின் ஓட்டம் ஆகும். இவ்வாசியானது தன் ஓட்டத்தின் போது வர்மத் தலங்களில் தங்கிச் செல்கிறது என்பது நூல்கள் கூறும் உண்மை. வாசி தங்குகிறது என்றால் ஒரே இடத்தில் நிலையாக குவிந்து கிடக்காமல் பல முக்கிய வர்ம தலங்களில் மையம் கொண்டிருப்பதோடு ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு சீராக இயங்கவும் செய்கிறது.

வாசி எனும் பிராணன், சில குறிப்பிட்ட வழித்தடங்களில், பல வர்ம தலங்கள் வழியே கோர்வையாக இயங்கி, மாலையைப் போன்று ஒரு சுழற்சியை (Circuit)மேற்கொள்வதையே "சரம்"(Circulation of vital energy) என்கிறோம்.

சரத்தின் வேறுபெயர்கள்

| | | |
|---|---|---|
| 1. வாயு | 7. பிராணன் | 13. மூச்சு |
| 2. உயிர் | 8. பிரகாச காற்று | 14. பரமசிவம் |
| 3. வாசி | 9. அறிவு | 15. ஆனந்த ஆவி |

4. சீவன் 10. ஆத்மா 16. பரசித்த அசைவு

5. புரவி 11. பரம் 17. வர்மம்

6. காலன் 12. சுவாசம் 18. பிரகாச அருவி

**சுவாசம்**

இடது மூக்குதுளை, வலது மூக்குதுளை, இருமூக்குத் துளைகள் வழியே சுவாசம் மாறி மாறி ஓடும் போது, ஆறு ஆதாரங்களின் அட்சர இதழ்களாகிய 51 இதழ்களில் முட்டி, மோதி, உந்தித் தள்ளி, உட்புகுந்து உடலெங்கும் சுற்றி ஓடுகிறது. இவ்வாறு ஓடுகின்ற சுவாசம் இடது மூக்கு துளை வழியாக உட்புகும் போது உடல் குளிர்ச்சி அடைகிறது. வலது மூக்கு துளை வழியாக உட்புகும் போது உடல் வெப்பமடைகிறது. இரு மூக்குத் துளைகள் வழியே உட்புகும் போது உடல் நடு நிலை அடைகிறது.

**நாடிகள்**

வாத, பித்த, கபமெனும் முத்தோடங்களில் ஒடுங்கும் தசநாடிகள் (Vital energy Channels) ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு வழித்தடம் உண்டு. இந்நாடிகளில் வாசி என்னும் பிராணன் ஒன்றித்து தத்தமது வழித்தடத்தின் வழியாக செல்லும்போது தமது தொழிலை செவ்வனே செய்கின்றன. இந்த தசநாடிகள் ஒவ்வொன்றின் வழித்தடத்திலும் ஒரு படுவர்மமும், எட்டு தொடுவர்மங்களும் நிலைகொண்டுள்ளன. இவ்வர்ம தலங்கள், வாசி தங்கி- தேங்கி - பொங்கி அடுத்த தலத்துக்கு அதைக் கடத்தும் இயல்புடையன. இவ்வாறு வர்ம தலங்களில் வாசி தங்கி-தேங்கி-நிற்கும் போது, வாசி எனும் பிராண சக்தியாகிய உயிர் சக்தியை உடலின் ஊனாகிய (Flesh) சதைப்பகுதிக்கு- அதாவது சதையாலான உறுப்புகளுக்கு பகிர்ந்தளிக்கும்

வேலையும் நடைபெறுகிறது. இதனால் நாடிகளில் பிராணன் எனும் வாசியின் ஓட்டம் தடையின்றி நடக்க இவ்வர்ம தலங்கள் காரணமாக அமைவதோடு உடலுக்கு தேவையான உயிர் சக்தியை உடலோடு மருவல் செய்யும் மையங்களாகவும் இவை செயல்படுகின்றன.

இந்த தச நாடிகளோடு பைசினி நாடி, விசுவோதரை நாடி என்ற இரு கூடுதல் நாடிகளை வர்ம நூல்கள் குறிப்பிடுகின்றன.

*"குருவான பைசினியோ நாடி யப்பா*

*கூண்டிருந்த சிறியஅத்தி சுருக்கி தன்னில்"*

*(வர்ம சூடாமணி என்னும் பஞ்சீகரணப் பின்னல் 113 ,1500)*

*"கணக்கான விசுவோதரை நாடி யப்பா*

*கருவான வலியஅத்தி சுருக்கித் தன்னில்"*

*(வர்ம சூடாமணி என்னும் பஞ்சீகரணப் பின்னல் 114 ,1500)*

அவ்வாறாயின் 12 நாடிகளும், நாடிகளுக்கு ஒன்பது வர்மங்கள் என்ற கணக்கில் (12x 9) மொத்தம் 108 வர்மங்களாகின்றன. இந்த 108 வர்மங்களும் நாடிகளோடு தொடர்புடையன. இவை வாயுவின் ஓட்டத்தை சீர்செய்கின்றன.

## வர்மமும் காலமும்

-

### வர்மம்

*"செப்புறு தசைகளென்பு சிறு பெரு நரம்புசந்து*

*தப்புறு நாடியாறும் தங்குமிடம் வன்மமாமே"*

*(வர்ம விதி)*

மனித உடலில் தசைகள், எலும்புகள், சிறுநரம்புகள், பெருநரம்புகள், பொருத்துகள், நாடிகள் (Blood Vessels) ஆகியவற்றின் வன்மையான சந்தி தலங்களில் (Vulnerable joints) எந்நேரவும் வாசி என்னும் பிராணன் நிலைகொண்டிருப்பதால், உடலின் தூல பகுதியாகிய அத்தலங்களில் எந்நேரத்தில் தாக்கம் ஏற்பட்டாலும், அவ்விடத்துக்குரிய உடன் விளைவுகளை ஏற்படுத்தும். இவ்வாறான தலங்களையே "வர்மம்" என்பர். என்றாலும் இத்தலங்கள் தாக்கப்படும் போது குறிப்பிட்ட கால அளவுக்குள் இளக்கிக் கொள்ள வேண்டும் என்ற அவதி கூறப்படுவதால் சிறப்பான சூழ்நிலையில் இதை "காலம்" என்றும் குறிப்பிடுவர்.

**காலம்**

குறிப்பிட்ட வர்ம தலங்களின் உள்ளே, வாசி என்னும் பிராணன் தங்கிச் செல்லும் அக்குறிப்பிட்டக் காலத்தில் மட்டும், உடலின் சூக்கும பகுதியாகிய அத்தலத்திற்கு புறபகுதியில் தாக்கம் ஏற்படும் போது உடன் விளைவை ஏற்படுத்தும் தலங்களை "காலம்" என்பர். என்றாலும் வாசியின் மருவல் பாதிக்கப்படுவதால் பொதுவாக இதை "வர்மம்" என்றும் அழைப்பர்.

*“சூளப்பா வர்மமது நூற்றெட் டென்பார்*

*சுடர்மதியின் சூட்சமதை யறியாமல் தான்*

*மாளப்பா வர்மம்வேறு காலம் வேறாம்*

*வகையான சூட்சமதை யுரைக்கத் தானே*

*கேளப்பா அம்புவியில் சரத்தி னுள்ளே*

*கணக்கறிந்தால் காலமது அறியலாகும்*

*நாளப்பா வர்மமென்றால் வன்மை யுடன்*

*நிலைபெற் றெந்நாளு மிருப்ப தாகும்"*

*(வர்ம சர சூத்திரத் திறவுகோல் - 36)*

## வர்மத்தின் பிரிவுகள்

1. படுவர்மம் - 12
2. தொடுவர்மம் - 96
3. தட்டு வர்மம் - 8
4. உள் வர்மம் - 6
5. மெய்தீண்டாக்காலம் - 1

## வர்மத்தின் வேறுபெயர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. வன்மம் | 4. சூட்சம் | 7. ஈடு | 10. சரம் |
| 2. காலம் | 5. மர்மம் | 8. அமிர்தநிலை | |
| 3. அடக்கம் | 6. ஏமம் | 9. வாசிதானம் | |

## வர்ம மாத்திரை

வர்ம தாக்குதல் விசையின் அளவே "மாத்திரை" ஆகும். ஒரு வர்ம தலம் எந்த அளவு விசையில் தாக்கப்படும் போது அதற்காகக் கூறப்பட்டுள்ள குறிகுணங்களை முழுமையாக

வெளிப்படுத்துகிறதோ அவ்விசை அவ்வர்மத்துக்கு ஒரு மாத்திரையாகும். காயம் ஏற்படுத்த தூரத்திலிருந்து செலுத்தும் அதே அளவு விசையை, மருத்துவத்தின் போது தோலுக்கு மேலிருந்தும் செலுத்தலாம் இது அனுபவத்தில் உணரலாம்.

*“ காணுகின்ற தொடுவர்மம் தொண்ணூற் றாறும்*

*கடினமாய் மாத்திரைக்கு மிஞ்சிக் கண்டால்*

*ஆணவமாய் தொடுவர்மம் அல்ல சொன்னேன்*

*அப்போதே படுகாயமென் றெண்ணிக் கொள்நீ”*

*(வர்ம ஒடிவு முறிவுசாரி - 1500)*

வர்மங்கள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனி மாத்திரைகள் கூறப்பட்டுள்ளன. தொடுவர்மங்கள் 96-ன் இடங்களில் அதற்கான குறிப்பிட்ட மாத்திரையை விட மிஞ்சி காயம் கொண்டால், அதை படுவர்ம காயமாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

## நாலுமாத்திரை

மாத்திரை என்பது ஓர் அலகு (Unit). இது வர்ம தாக்குதலின் விசையை குறிக்கப் பயன்படுகிறது. ஒரு வர்ம பகுதியில் அடித்து ஒருவரை மயக்கமுற செய்யவோ அல்லது மயக்கமுற்றவரை எழுப்பவோ செய்ய, வர்ம தலங்களில் கையாளப்படும் விசையின் அளவே மாத்திரை எனப்படும். வர்ம மாத்திரையை நான்கு அளவாகப் பிரிக்கலாம். இந்த நான்கு அளவுகளும் சேர்த்து நாலுமாத்திரை என அழைக்கப்படுகிறது. அவை :

1. **கால் மாத்திரை :** இந்த அளவு விசையால் செய்யப்படுவது "ஈடு" என அழைக்கப்படுகிறது. இதனால் பாதிப்பு இருக்காது.

அதாவது குறைவுபட்ட வாசி ஓட்டத்தை ஈடு செய்ய இம்மாத்திரை பயன்படுகிறது. எனவே நோய்களை குணமாக்கும் சிகிச்சை முறைகளில் இது முக்கியத்துவம் வாய்ந்ததாகிறது.

2. **அரை மாத்திரை :** இந்த அளவு விசையால் செய்யப்படுவது "ஏமம்" என்றழைக்கப்படுகிறது. இதனால் வலி, மரத்துப் போதல் ஏற்படும். ஏமம் என்றால் பாதுகாப்பு எனப்பொருள், அதாவது உயிருக்கு பாதுகாப்பு. குணப்படுத்தும் சிகிச்சை முறைகளிலும் இம்மாத்திரையளவே பாதுகாப்பானதாகும். அதோடு எதிரிகளை, அவர்களின் உயிருக்கு பாதகமின்றி அவர் தம் வர்ம தலங்களில் தாக்கி செயலிழக்கச் செய்யவும் இம்மாத்திரையே பாதுகாப்பான அளவாகும்.

3. **முக்கால் மாத்திரை :** இந்த அளவு விசையால் செய்யப்படுவது "காலம்" என்றழைக்கப்படுகிறது. இதனால் மயக்கம் உண்டாகும். இம்மாத்திரையளவு தாக்குதல் செய்யும் போது, ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் இளக்கிக் கொள்ள வேண்டும். அல்லது மரணம் வரும் என்ற அவதி நிலைக்கு தள்ளப்பட்டுவிடும்.

4. **முழு மாத்திரை :** இந்த அளவு விசையால் செய்யப்படுவது "வர்மம்" என்றழைக்கப்படுகிறது. இதனால் அசாத்திய குறிகுணங்கள் வரும். முழுமையாக ஏற்றுக்கொள்ளும் போது சீர்செய்ய முடியாத படி வாசி ஓட்டம் பாதிக்கப்பட்டு நிரந்தர நோய்களையும் சில சமயம் மரணத்தையும் தரக்கூடும். இதிலிருந்து ஒரு மனிதரை குணப்படுத்துவது கடினமானதாகும். இதற்கு முறையான மற்றும் விரைவான மருத்துவம் மேற்கொள்ள வேண்டும்.

## இறை

இறை என்பது பெரு விரல் அகல அளவு (Thumb Finger Breadth)ஆகும். வர்ம நூல்களில் சில இடங்களில் "அரை இறை தாழ்த்த வர்மம் ஏறும்" என்று எழுதப்பட்டிருப்பதை காணலாம்.

இதன் பொருள் யாதெனில் வர்ம தலத்தில் விரல் ஊன்றி அரை இறை ஆழத்துக்கு விரல் பதியும்படி நன்றாக அழுத்த, அந்த அழுத்தத்தின் மாத்திரைக்கு தகுந்தவாறு காயதலங்களில் தாக்கம் (காயம்) ஏற்படுகிறது.

1) **கால் இறை** : வர்மத் தலங்களில் காயம் கொள்ளும் போது, கால் இறை பதிந்தால் இடகலை வழியாக மச்சையில் புகுந்து காயம் ஏறும்.

2) **அரை இறை** : வர்மத் தலங்களில் அரை இறை பதிந்தால் பிங்கலை வழியே நரம்பில் புகுந்து காயம் ஏறும்.

3) **முக்கால் இறை** : வர்மத் தலங்களில் முக்கால் இறை பதிந்தால் சுழிமுனை வழியே எலும்பில் புகுந்து காயம் ஏறும்.

4) **முழு இறை** : வர்மத் தலங்களில் முழு இறை பதிந்தால் இடகலை, பிங்கலை, சுழிமுனை ஆகிய மூன்றின் வழியே புகுந்து மூளையில் காயம் ஏறும்.

5) **இறை மிஞ்சினால்** : வர்மத் தலங்களில் முழு இறைக்கும் அதிகமான மாத்திரையில் காயம் கொண்டால், சுரம், சன்னி, நரம்பு வெட்டு, விக்கல், வாந்தி, கபமூர்ச்சை, வியர்வை, தாகம் போன்ற குறிகுணங்களைக் காட்டி முக்கலை வழியே காயம் ஏறும்.

கால் மற்றும் அரை இறை வர்ம காயங்கள் மருத்துவத்தால் எளிதில் குணமாகும். முக்கால் மற்றும் முழு மாத்திரை வர்மக் காயங்கள் மருத்துவத்தால் அரிதில் தீரும். சிலவேளைகளில் மரணமும் உண்டாகும். என்றாலும் காயத்தின் கூறு, காய தலத்தின் தன்மை, காயத்தின் இறை அளவு, குணம், கதிர்-மதியின் நிறம், திரிநாடியின் தரம், தசநாடி-நரம்பு முறிவுகளின் தன்மை இவற்றைக் கருத்தில் கொண்டு மருத்துவம் செய்யலாம்.

# வர்ம புள்ளிகளின் இருப்பிடம்

## தொகுதி - I

## வர்ம புள்ளிகளை இடமறியும் முறைகள்

வர்ம மருத்துவத்தை கற்றுக் கொள்வதற்கு முன்னதாக வர்ம புள்ளிகளின் இருப்பிடங்களை அறிந்து கொள்வது மிகவும் அவசியமான ஒன்றாகும். வர்ம புள்ளிகளின் சரியான இருப்பிடம் கண்டறியப்பட்டால் மட்டுமே வர்ம மருத்துவத்தை(Varma Therapy) நாம் வெற்றிகரமாக கையாளமுடியும். ஏனெனில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒரு குறிப்பிட்ட அளவு மாத்திரையின் வேகத்தில்(a varma unit of force),அடிக்கவோ, இடிக்கவோ, அழுத்தவோ, தேய்க்கவோ, குத்தவோ, நசுக்கவோ செய்தால் மட்டுமே வர்மம் ஏற்றுக் கொள்ளவோ அல்லது இளகவோ செய்யும். எனவே வர்ம புள்ளிகளின் இருப்பிடங்களைத் துல்லியமாக கண்டறிந்தால் மட்டுமே இந்த வர்ம மருத்துவத்தை நாம் வெற்றிகரமாக கையாள முடியும்.

வர்ம புள்ளிகளின் இடங்களைக் கண்டறிய பல முறைகள் பயன்படுகின்றன. இந்த முறைகளில் இந்த முறையைப் பயன்படுத்தி அளவீடு (measurement) செய்தாலும் வர்ம புள்ளிகளின் சரியான இருப்பிடங்கள் கண்டறியப்பட வேண்டும். அதாவது ஒரு வர்ம புள்ளியை எத்தனை வித அளவு முறைகளால் அளந்தாலும், அத்தனை முறைகளும் ஒரே இடத்தையே குறிப்பதாக இருக்க வேண்டும்.

கீழ்க்காணும் முறைகள் வர்ம புள்ளிகளின் இருப்பிடங்களைக் கண்டறிய பயன்படுகின்றன. அவை:

1. உடற்கூறுக் குறிகள்

2. விகித சமச்சீர் அளவீடு

3. உடல்திட்டக் கோடுகளும் பெயரிடுதலும்

4. வரைபட அளவீட்டு முறை

5. அருகாமை வர்மபுள்ளிகளை ஒப்பீடு செய்து இடமறிதல்

6. வகைபாட்டின் அடிப்படையில் இடமறிதல்

7. விரல் அளவீட்டு முறை

8. நூல் அளவீட்டு முறை

## வர்ம விரலளவு நூல் :

வர்ம பீரங்கி - 100, வர்ம சாரி - 205ஆகிய நூல்களின் ஆரம்ப பகுதியிலும், வர்ம கண்ணாடி - 500, வர்ம ஒடிவு முறிவு சரசூத்திரம் - 1200ஆகிய நூல்களின் இடைப்பகுதியிலும், வர்ம சூத்திரம் - 101, வர்ம கண்டி உரைநடை போன்ற நூல்கள் முழுவதும் பரவலாகவும் வர்ம விரல் அளவு பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. ‘வர்ம விரலளவு நூல்’ என்று தனியே ஒரு நூலைக் காணும் போது இது மேற்கண்ட நூற்களிலிருந்துஎடுத்தெழுதப்பட்டதாக இருக்குமோ என்ற சந்தேகம் எழுந்தது. ஆனால் அந்நூற்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது இந்நூல் யாதொரு வர்ம நூலின் விரல் அளவு முறை வழியையும் பின்பற்றாத நூல் என்றும், தனக்கென தனி நடையோடு விளங்கும் ஒரு புதிய நூல் என்றும் விளங்கியது.

-

மொத்த வர்மங்கள் 108

1. தலை-கழுத்து 25

2. மார்பு-வயிறு 56

3. கை 15

4. கால் 12

**1. தலை - கழுத்திலுள்ள வர்மங்கள் - 25**

**(படு வர்மங்கள்- 6. தொடுவர்மங்கள் - 19)**

உச்சி நடுவில் (1) கொண்டைக்கொல்லி. இது தொடு வர்மம் இந்த இடத்திலிருந்து பன்னிரண்டு விரலுக்குக் கீழே பின்புறம் (2) சீறுங்கொல்லி. இது தொடு வர்மம். இந்த வர்மத்துக்கு நாலு விரலுக்குக் கீழே (3) பிடரிவர்மம். இது படுவர்மம். இந்த வர்மத்துக்கு இரண்டு விரலுக்கு வலத்தேயும், இடத்தையும் (4) கொண்டை நரம்பு வர்மம். இது தொடுவர்மம். இதிலிருந்து நாலு விரலுக்குப் பக்கத்தில் காதின் பின்புறத்தில் (5) நெட்டி வர்மம். இது தொடு வர்மம். இதிலிருந்து இரு விரலுக்கு முன்னே (6) செவிகுத்திக் காலம். இது படுவர்மம். இதிலிருந்து ஒரு விரலுக்கு கீழ் தண்டுக்குள் (7) குருந்து வர்மம். இது தொடுவர்மம். இதன் பின்னே ஆறாவது விரலுக்குள் (8) பெருநரம்பு வர்மம். இது தொடு வர்மம். இதற்கு ஆறு விரலுக்கு முன்னால் (9) பொய்கைக் காலம். இது தொடு வர்மம். இதற்கு நான்கு விரலுக்கு முன்னால் (10) நட்சேத்திரக் காலம். இது படுவர்மம். இதற்கு இரண்டு விரலுக்குக் கீழே (11) அலவு காம்பூரி வர்மம். இது தொடு வர்மம். இதற்கு இரண்டு விரலுக்கு வலத்தே சிறு

தண்டின் பக்கம் (12) கபால வர்மம். இது தொடுவர்மம். இதற்கு மூன்று விரலுக்கு கீழ் (13) கவள வர்மம். இது தொடு வர்மம். இதற்கு நான்கு விரலுக்கு கீழ் (14) உறக்க காலம். இது படு வர்மம். இதற்கு கீழ் நான்கு விரலுக்குள் கொண்டை நரம்புக்கும், சங்கு நரம்புக்கும் மத்தியில் (15) உதிரக் காலம். இது தொடுவர்மம். உதிர காலத்துக்கு நாலு விரலின் கீழ் காளா எல்லுக்கு மேலே (16) கண்ணு தள்ளு வர்மம். இது தொடு வர்மம். இதற்கு நாலு விரலுக்கு முன்னால் (17) பிராண சாதம். இது தொடு வர்மம். இது தொண்டை பதைப்பு. இதன் மேல் ஒரு விரலுக்குள் (18) திவளை வர்மம் இது படுவர்மம். இதற்கு மேல் ஐந்து விரலில் சங்கு பூட்டிற்கு மேல் (19) முண்டிரு வர்மம். இது தொடு வர்மம். இதற்கு எட்டு விரலின் மேல் நாசியின் முன் முகப்பில் (20) சுழிமுனைக் காலம். இது தொடு வர்மம். சுழிமுனைக்கு இரண்டு விரலுக்கு மேல் மூக்குக் கண்ணாடி போடுமிடம் (21) கண்ணாடிக் காலம். இது தொடுவர்மம். இதற்கு ஒன்றரை விரலுக்கு மேலே (22) திலர்த வர்மம். இது படுவர்மம். இந்த வர்மத்துக்கு அடுத்து மேல் இமை பள்ளத்திலும், கீழ் இமை பக்கத்திலும் (23) மின் வெட்டிக் காலம். இது தொடுவர்மம். கண்ணின் கருவிழியின் மத்தியில் (24) படை வர்மம். இது தொடு வர்மம். வாயில் (25) அன்னக் காலம். இது தொடுவர்மம்.காளா எலும்புக்கு மேலே உச்சி வரையுள்ள வர்மம் இருபத்தைந்தில் படுவர்மம். ஆறு. தொடு வர்மம் பத்தொன்பது.

**2. மார்பு - வயிற்றிலுள்ள வர்மங்கள் - 56**

**(படு வர்மங்கள் - 6. தொடுவர்மங்கள் - 50)**

காளா என்பின் கீழ் உள்ள வர்மங்களை கவனிப்போம். தொண்டை குழிக்கு ஆறு விரலுக்கு கீழே (காரை என்பு மையக்கோட்டில்) (1) காரீரல் வர்மம். இது தொடு வர்மம். மேற்படி வர்மத்துக்கு இரண்டு விரலுக்குக் கீழே (2) வெள்ளீரல் வர்மம். இது தொடு வர்மம். காரீரல் வர்மத்துக்கு இரண்டு விரலுக்கு வலத்தே(3) அனுமான் வர்மம். இது தொடு வர்மம். இந்த வர்மத்துக்கு மூன்று விரலுக்கு வலத்தே (4) கதிர் காம வர்மம். இது தொடு வர்மம். இதற்கு மூன்று விரலுக்கு கீழே (5) கூம்புக்குழி வர்மம். இது படுவர்மம். இந்த வர்மத்துக்கு இரண்டு விரலுக்கு கீழே (6) கூம்பு வர்மம். இது தொடுவர்மம். இந்த வர்மத்துக்கு எட்டு விரலுக்கு மேலே (7) துடி வர்மம். இது தொடு வர்மம். கூம்பு வர்மத்துக்கு மூன்று விரலுக்கு கீழே (8) உறுமிக் காலம். இது படு வர்மம். இதற்கு நான்கு விரலுக்குக் கீழே (9) உந்தி வர்மம். இது தொடு வர்மம். இதற்கு நாலு விரலுக்குக் கீழே (10) மூத்திரக் காலம். இது படுவர்மம். இதற்கு இரண்டு விரலுக்குக் கீழே (11) ஆமைக் காலம். இது தொடு வர்மம். இந்த வர்மத்திற்கு வலத்தே நாலு விரலுக்குள் (12) அரையாப்பு வர்மம். இது தொடு வர்மம். இவ்வர்மத்துக்கு ஒரு விரலின் கீழே (13) அணி வர்மம். இது தொடு வர்மம். ஆமை காலத்துக்கு நாலு விரலுக்குக் கீழே (14) லிங்க வர்மம். இது தொடுவர்மம். இந்த வர்மத்துக்கு இரு விரலுக்குக் கீழே (15) கல்லடைக் காலம். இது படுவர்மம். இவ்வர்மத்துக்கு மூன்று விரலுக்கு வலத்தே (16) வித்து வர்மம். இது தொடுவர்மம்.கல்லிடை காலத்துக்கு மூன்று விரலுக்கு கீழே (17) நீர்தரிப்பு வர்மம், இது தொடுவர்மம். இவ்வர்மத்துக்கு நாலு விரலுக்குக் கீழே (18) தண்டுவொடி வர்மம். இது தொடுவர்மம். இவ்வர்மத்துக்கு இரண்டு விரலுக்குக் கீழே (19) குண்டெலிக் காலம். இது தொடு வர்மம். இந்த வர்மத்துக்கு மூன்று விரலுக்குக் கீழே (20) மூட்டு வர்மம். இது தொடுவர்மம். அரையாப்பு காலத்துக்கு நாலு

விரலுக்கு மேல் (21) கச்சை காலம். இது தொடு வர்மம். இவ்வர்மத்துக்கு இரண்டு விரலுக்கு மேல் (22) சிறிய அத்தி சுருக்கி காலம். இது படுவர்மம். இதற்கு இரண்டு விரலுக்கு மேல் (22) பெரிய அத்தி சுருக்கி காலம். இது பொல்லாத படுவர்மம். இது மூன்று விரலுக்கு மேலே (23) முண்டெலும்பு காலம். இது தொடுவர்மம். இதற்கு நாலு விரலுக்கு உயரே (24) அடப்பு வர்மம். இது படுவர்மம். அடுத்தடுத்து (25-32) வாரி எலும்பு வர்மம் எட்டு. இது தொடுவர்மம். கைக்குழியில் அக்குளில் (33) எழுத்து வர்மம். இது தொடுவர்மம். மேற்படி வர்மத்துக்கு எட்டு விரலுக்கு வலத்தே (34) சூத்திரக் காலம். இது தொடு வர்மம். இந்த வர்மத்துக்கு ஆறு விரலுக்கு உயரே (35) விலங்கு வர்மம். இது தொடு வர்மம். இந்த வர்மத்துக்கு நான்கு விரலுக்கு உயரே (36) கோட்டைக் காலம். இது தொடு வர்மம். இந்த வர்மத்துக்கு எட்டு விரலுக்கு கீழே மறுபக்கத்தில்(37) சீப்பெலும்பு வர்மம். இது தொடு வர்மம்.கழுத்தில் காளா என்புக்கு கீழ், சூத்திர காலத்துக்கு இரண்டு விரலுக்கு வலத்தே (38) அத்தி காந்தாரி வர்மம். இது தொடு வர்மம். இந்த வர்மத்துக்கு இரண்டு விரலுக்கு வலத்தே (39) காந்தாரி வர்மம். இது தொடு வர்மம்.

புஜத்திலே (1) செப்பு வர்மம். இது தொடு வர்மம். மேற்படி வர்மத்துக்கு எட்டு விரலுக்குக் கீழே (2) தவளை காலம். இது தொடு வர்மம். இந்த வர்மத்துக்கு எட்டு விரலுக்குக் கீழே (3) முழங்கை மூட்டு வர்மம். இது தொடு வர்மம். இந்த வர்மத்துக்கு எட்டு விரலுக்கு கீழே (4) விஷமணிபந்த வர்மம். இது தொடு வர்மம். இந்த வர்மத்துக்கு நான்கு விரலுக்குக் கீழே (5) குருநாடி வர்மம். இது தொடு வர்மம். மேற்படி வர்மத்துக்கு நான்கு விரலுக்கு கீழே (6) மணிபந்த வர்மம். இது தொடு வர்மம். இந்த வர்மத்துக்கு மூன்று விரலுக்குக் கீழே (7) பாலசக்கர வர்மம். இது தொடு வர்மம். இதற்கு

மறுபுறத்தில் உள்ளங்கையில் (8) வெள்ளை வர்மம். இது தொடு வர்மம். பாலசக்கர வர்மத்துக்கு இரண்டு விரலுக்கு கீழே (9) சொர்ண தெச்சனைக் காலம். இது தொடு வர்மம். மேற்படி வர்மத்துக்கு நடுவே (10) சிங்கார மணிக்கட்டு காலம். இது தொடு வர்மம். கையில் (11) கவளி காலம். இது தொடு வர்மம். இது பெருவிரல் மத்திய இடுக்கில், மற்ற விரல்களின் மத்தியில் (12) அடுக்கு வர்மம், (13) இடுக்கு வர்மம், (14) முடுக்கு வர்மம் ஆக வர்மங்கள் நான்கு. இவை தொடு வர்மம். இவற்றிற்கு அருகே (15) சுண்டோதரி வர்மம். இது தொடு வர்மம்.

**4. காலிலுள்ள வர்மங்கள் - 12**

இடுப்பில் (1) செப்பு வர்மம். இது தொடு வர்மம். மேற்படி வர்மத்துக்கு எட்டு விரலுக்குக் முன்னே (2) பதைக்கால் வர்மம். இது தொடு வர்மம். இந்த வர்மத்துக்கு பன்னிரண்டு விரலுக்குக் கீழே (3) ஆம வர்மம். இது தொடு வர்மம்.

இதற்கு பத்து விரலுக்குக் கீழே (4) கால் மூட்டு வர்மம். இது தொடு வர்மம். இந்த வர்மத்துக்கு பத்து விரலுக்கு கீழே (5) குதிரை முக வர்மம். இது தொடு வர்மம். இந்த வர்மத்துக்கு பத்து விரலுக்குக் கீழே (6) நாய்கால் பொருத்து வர்மம். இது தொடு வர்மம். இந்த வர்மத்தின் பக்கத்தில் எட்டு விரலின் கீழே (7) குதிகால் வர்மம். இது தொடு வர்மம். நாய்கால் வர்மத்துக்கு இரண்டு விரலுக்கு கீழே(8) முடிச்சு வர்மம். இது தொடு வர்மம் மேற்படி வர்மத்துக்கு இரண்டு விரலுக்கு கீழே (9) படை முறித்தான் காலம். இது தொடு வர்மம். இந்த வர்மத்துக்கு இரண்டு விரலுக்கு கீழே உள்ளங்கால் (10) வெள்ளை வர்மம். இது தொடு வர்மம். மேற்படி படை முறித்தான் வர்மத்துக்கு மூன்று விரலுக்குக் கீழே (11) கவளிக் காலம். இது தொடு வர்மம். இந்த வர்மத்துக்கு மூன்று விரலுக்கு கீழே (12) பூமிக் காலம். இது தொடு வர்மம்.

# வர்மம் 108

## சாத்திய-அசாத்திய குறிகுணங்கள்

### சாத்திய குறிகுணங்கள் :

வர்ம காயம் ஏற்பட்டு பிராணகலை தன்னிலை மாறி வேறுபட்டு நின்று இரவு பகல் மூன்று நாட்கள் கடந்து விட்டால் உயிருக்கு தோடமில்லை. இது சாத்தியமான வர்மமேயாகும். மருத்துவம் செய்யலாம். மேலும் வர்ம காயத்துக்கு பிறகும் ஆசயம் ஐந்தும் (அமர்வாசயம், பகிர்வாசயம், சலவாசயம், மலவாசயம், சுக்கிலவாசயம்) தத்தமது வழிகளில் நிலை பிசகாமல் நின்று தன் தன் தொழிலைச் செய்யுமானால் மரணம் இல்லை. இது சாத்தியமான வர்மமே என்று கண்டு கொள்ளலாம்.

### அசாத்திய குறிகுணங்கள் :

வர்மத்தில் முறிவு ஏற்பட்டிருத்தல். பிடரி முறிந்து குழைந்து காணல். தோள், திவளை மற்றும் சங்கு பகுதி நெரிவு பட்டிருத்தல். அத்திசுருக்கி பகுதியில் அதிக அடிபட்டு முறிவு ஏற்பட்டிருத்தல். கல்லிடை கால பகுதி அடிபட்டு பீச விதை கலங்கி காணல். செவிக்குற்றி கலங்கி காணல். இரு கண்ணோடு அவயங்கள் பிளந்திடல். மூங்கில் வட்டம் விரிதல். பஞ்சவர்ண குகை நொறுங்கல். மலசலம் வெளியேறல், இந்திரியம் வீழ்தல். கபம் அதிகரித்து அங்கம் வியர்த்தல்.

# வர்ம வகைப்பாடுகள்

-

பொதுவாக வர்மங்களை கீழ்கண்டவாறு வகைப் படுத்துகின்றனர். அவை :

படு வர்மம் - 12
தொடு வர்மம் - 96
தட்டு வர்மம் - 8
உள் வர்மம் - 6
நோக்கு வர்மம் - 1
மயக்கு வர்மம் - 12

மனித உடலிலுள்ள 108 வர்மங்களை இந்த அறிவியலைக் கண்டறிந்து வளர்த்த சித்தர்களும், சான்றோர்களும், பல்வேறு அடிப்படைகளில் பலப்பல வகைகளாக வகைப்படுத்தியுள்ளனர். இத்தகைய வகைப்பாடுகள், வர்மங்களின் இருப்பிடம், குணம், தன்மை, மருத்துவப் பயன்கள் போன்ற பல செய்திகளை அறிவிப்பனவாக உள்ளன.

## வர்ம வகைப்பாடுகள் :

1. வர்ம காய வகைப்பாடு (Traumatic Classification)
2. நாடி வகைப்பாடு (Classification on the basis of Channels)
3. ஆதார வகைப்பாடு (Classification on the basis of Aatharam)
4. முக்குற்ற வகைப்பாடு (Humoral Classification)
5. பஞ்சபூத வகைப்பாடு (Classification on the basis of Five Elements)
6. எண்ணிக்கை வகைப்பாடு (Numerical Classification)
7. கண்ட வகைப்பாடு (Regional Classification)

## 1. வர்ம காய வகைப்பாடு :

உடலில் வர்ம காயம் ஏற்படும் முறையின் அடிப்படையில் வர்மங்களை இரண்டாக வகைப்படுத்தலாம்.

1. படு வர்மங்கள் - 12
2. தொடு வர்மங்கள் - 96

மொத்த வர்மங்கள் - 108

## 1. படு வர்மம் (12) :

'படு' என்றால் 'பெருகச் செய்' 'துன்புறுத்து', 'அழித்தல் செய்' என்று பல பொருள்படும். இந்த வர்மங்கள் துன்பத்தைப் பெருகச் செய்து அழிவையும் (மரணத்தையும்) ஏற்படுத்தும் வர்மங்களாகையால் இப்பெயர் பெற்றது. மேலும் கட்டை குத்தல், தடியடிகள், எறி விசைகள் படுதலாலும் ஏற்படும் வர்மமாகையால் படு(தல்) வர்மம் என்றும் பெயர் பெற்றிருக்கலாம். படுவர்மங்கள் பொதுவாக உள் உறுப்புகளைப் பாதிப்பனவாகவும் உள்ளன. இவ்வுள்ளுறுப்புகள் எலும்புகள் மற்றும் தசைகளால் பொதிந்து பாதுகாக்கப்பட்டிருப்பதால், படுவேகமான விசையில் காயம் பட்டால் மட்டுமே இவ்வர்மம் ஏற்படும். படுவர்மம் 'எலும்பின் கூறு' ஆகும். இவ்வர்மங்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு நாடிகள் பட்டுச் செல்வதாலும் இவை 'படு வர்மங்கள்' என அழைக்கப்படலாம் என்றும் கருத இடமுண்டு. படுவர்மங்கள் பெயரால் 12-ம், தலத்தால் 19-ம் ஆகும்.

| எண் | படுவர்மத்தின் பெயர்கள் | பாதிக்கும் உறுப்பு | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | திலர்த வர்மம் | மூளை | 1 |
| 2. | நட்சத்திர வர்மம் | கண் | 2 |
| 3. | செவிகுத்தி வர்மம் | காது | 2 |

4. பிடரி வர்மம் முகுளம் 1
5. உறக்க வர்மம் தொண்டை 2
6. தும்மி வர்மம் குரல்வளை 1
7. நேர் வர்மம் இருதயம் 1
8. அடப்ப வர்மம் நுரையீரல் 2
9. உறுமி வர்மம் வயிறு 1
10. அ)வலிய அத்திசுருக்கிவர்மம் சிறுநீரகம் 2
ஆ) சிறிய அத்திசுருக்கிவர்மம் சிறுநீரகம் 2
11. மூத்திர காலம் மூத்திரப்பை 1
12. கல்லிடை வர்மம் விதை 1

## 2. தொடு வர்மம் (96) :

-

தொடுவதன் மூலம் ஏற்படும் வர்மங்கள் தொடுவர்மங்களாகும். மேலும் இவ்வர்மத்தை அழுத்துவதன் மூலமும், தடவுவதன் மூலமும் ஏற்படுத்தலாம். மாற்றானின் கைபிடிகள் படுதலாலும் (பூட்டு முறைகள்) இவ்வர்மம் ஏற்படலாம். பிதுக்கல், பின்னல், ஊன்றல், அமர்த்தல், ஏந்தல், தாக்கல், தள்ளல் போன்ற முறைகளிலும் இவ்வர்மத்தை ஏற்படுத்துவர்.

*'கட்டான ஈராறும் வழியெட்டாகி கருதினதால்*

*தொடுவர்மம் தொண்ணூற்றாறு' (வ.ஒ.மு.சரசூத்திரம்-1200)*

இவ்வர்மங்கள் தசைகள், தசை நாண்கள், விசிகள், நரம்புகள், இரத்த குழல்கள், என்புகள் போன்றவற்றின் சந்திப்புகளில் அமைந்துள்ளன. 'வர்ம குருநாடி' என்ற நூல் தொடுவர்மங்கள் 'நரம்பின் கூறுடையவை' என குறிப்பிடுகின்றது. ஒவ்வொரு நாடியும் எட்டு வர்மங்களை தொட்டு செல்கின்றன. இதனாலும்

இவ்வர்மங்கள் 'தொடு வர்மங்கள்' என்று அழைக்கப்படுகின்றன. (12x8 = 96) 2. நாடி வகைப்பாடு :

மனித உடலில் வாசி எனப்படும் பிராணசக்தி 12 நாடிகள் வழியே (Channels) இயங்குகிறது. இந்த 12 நாடிகளும், 12 படுவர்மங்களோடு தொடர்புடையதாக இருக்கிறது. அதாவது இந்த 12 படுவர்மங்களும் 12 நாடிகளுக்கு 'துணை வர்மங்கள்' என அழைக்கப்படுகிறது.

1. சுழுமுனை நாடி வர்மங்கள் - 9
2. பின்கலை நாடி வர்மங்கள் - 9
3. இடகலை நாடி வர்மங்கள் - 9
4. சிகுவை நாடி வர்மங்கள் - 9
5. புருடன் நாடி வர்மங்கள் - 9
6. காந்தாரி நாடி வர்மங்கள் - 9
7. அத்தி நாடி வர்மங்கள் - 9
8. அலம்புடை நாடி வர்மங்கள் - 9
9. சங்கினி நாடி வர்மங்கள் - 9
10. குகு நாடி வர்மங்கள் - 9
11. பைசினி நாடி வர்மங்கள் - 9
12. விசுவோதரைநாடி வர்மங்கள் - 9

மொத்த வர்மங்கள் - 108

ஒவ்வொரு நாடியோடும் எட்டு தொடு வர்மங்கள் (12x 8 = 96) தொடர்புடையதாக இருக்கிறது. இவை அவற்றின் 'இணை வர்மங்கள்' என அழைக்கப்படுகின்றன. ஆக ஒவ்வொரு நாடியிலும் ஒரு படுவர்மும், எட்டு தொடு வர்மமுமாக மொத்தம் ஒன்பது வர்மங்கள் அமைந்துள்ளன.

## 3. ஆதார வகைப்பாடு :

1. மூலாதார வர்மங்கள் - 3
2. சுவாதிட்டான வர்மங்கள் - 7
3. மணிப்பூரக வர்மங்கள் - 10
4. அனாகத வர்மங்கள் - 41
5. விசுத்தி வர்மங்கள் - 15
6. ஆக்கினை வர்மங்கள் - 32

மொத்த வர்மங்கள் - 108

ஆறு ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு 'வர்ம ஒடிவு முறிவு சரசூத்திரம்-1200' என்ற நூலானது வர்மங்களை வகைப்படுத்தியுள்ளது. உடலிலுள்ள ஒவ்வொரு ஆதாரத்தையும் மையமாகக் கொண்டு அதைச் சுற்றியுள்ள பகுதியில் அமைந்துள்ள குறிப்பிட்ட சில வர்மங்கள் அந்தந்த ஆதாரத்தைச் சார்ந்த வர்மங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

## 4. முக்குற்ற வகைப்பாடு :

வாதம் (வளி) பித்தம் (அழல்) கபம் (ஐயம் அல்லது சிலேத்துமம்) எனப்படும் முக்குற்றங்களே திரிதோடங்களாகும். இவற்றின் அடிப்படையிலும் வர்மங்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

1. வாத வர்மங்கள் - 64
2. பித்த வர்மங்கள் - 26
3. கப வர்மங்கள் - 6
4. வாததொந்த வர்மங்கள் - 4
5. பித்ததொந்த வர்மங்கள் - 5
6. கபதொந்த வர்மங்கள் - 3

மொத்த வர்மங்கள் - 108

5. **பஞ்சபூத வகைப்பாடு :**

வர்ம ஆணி சூத்திரம்-100 என்ற நூல் வர்மங்களை பஞ்சபூத அடிப்படையில் வகைபடுத்துகிறது.

1. பிருதிவி வர்மங்கள் - 36
2. அப்பு வர்மங்கள் - 15
3. தேயு வர்மங்கள் - 32
4. வாயு வர்மங்கள் - 13
5. ஆகாய வர்மங்கள் - 12

மொத்த வர்மங்கள் - 108

6. **எண்ணிக்கை வகைப்பாடு :**

'அகஸ்தியர் வர்மசாரி-205' என்ற நூலானது வர்மங்களை எண்ணிக்கையின் அடிப்படையில் இரு வகைகளாக வகைப்படுத்தியுள்ளது. ஒவ்வொரு வர்மமும் இந்த இருவகைகளுள் ஏதேனும் ஒன்றில் இடம் பெறுகிறது.

1. ஒற்றை வர்மங்கள் - 48
2. இரட்டை வர்மங்கள் - 60

மொத்த வர்மங்கள் - 108

7. **கண்ட வகைப்பாடு :**

உடலை கண்டங்களாகப் பகுத்து அதில் இடம் பெற்றுள்ள வர்மங்களை இக்கண்டங்களின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டுள்ளதே இவ்வகைப்பாடாகும். இதில் உடலை 5 கண்டங்களாகப் பகுத்துள்ளனர்.

வர்ம பீரங்கி-100, வர்ம கண்ணாடி-500, வர்மலாட சூத்திரம்-300 ஆகிய மூன்று நூற்கள் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்துகிறது.

1. கண்டத்தின் மேலுள்ள வர்மங்கள் - 25
2. கண்டம் முதல் உந்தி வரையுள்ள வர்மங்கள் - 45
3. நாபி முதல் மூலம் வரையுள்ள வர்மங்கள் - 9
4. கையிலுள்ள வர்மங்கள் - 14
5. காலிலுள்ள வர்மங்கள் - 15
மொத்த வர்மங்கள் - 108

## வர்ம தலங்கள் – 108

**முக்கிய வர்ம தலங்கள் - 108 :**

முக்கிய வர்மங்கள் 108 என்றாலும், உள் வர்மங்கள், மயக்கு வர்மங்கள் (12), முறிவு வர்மங்கள் (308) என்று இன்னும் பல வர்மங்கள் உண்டு என்று ‘வர்ம ஒடிவு முறிவு சரசூத்திரம்-1200’ என்ற நூல் குறிப்பிடுகிறது.

*‘எண்ணுகிலோ தத்துவங்கள திலேயுற்று*

*ஏங்கி நிற்கும் தொடுவர்மந் தொண்ணூற்றாறு*

*முன்னுரைத்த படுவர்மம் ஈராறோடே*

*முக்கியமாய் நூற்றெட்டு தலங்களாச்சு*

*மண்ணுலகில் உரைத்திட்டோம் ஈராறாக*

*வாசி இயங்குமிடமெங்கும் பல வர்மங்களே’*

*(வர்ம ஒடிவு முறிவு சரசூத்திரம்-1200)*

வாசி இயங்கும் இடமெங்கும் பல வர்மங்கள் உள்ளன என்று அந்நூல் குறிப்பிடுகிறது. ஆயினும் 108 வர்ம தலங்களே முக்கிய

வர்மங்களாகையால் அவற்றைப் பற்றி விரிவாக இங்கே காண்போம்.

1. கண்டத்தின் மேலுள்ள வர்மங்கள் - 25
2. கண்டம் முதல் உந்தி வரையுள்ள வர்மங்கள் - 45
3. உந்தி முதல் மூலம் வரையுள்ள வர்மங்கள் - 9
4. கையிலுள்ள வர்மங்கள் - 14
5. காலிலுள்ள வர்மங்கள் - 15

மொத்த வர்மங்கள் - 108

*ஆச்சென்றால் காலில் முவைந்தாச்சே அப்படி கையில் ஈரேழுமாச்சு*

*மெச்சென்று உந்திக்குக் கீழ்மேவிய ஒன்பதுவுமாச்சு*

*நேச்சென்றால் உந்திக்கும் மேல் நேர் மூன்று ஆறேழாச்சு*

*மிச்சென்றால் கண்டத்திற்கும் மேல் அய்யஞ்சு அதுவும் பாரே*

(*வர்ம லாட சூத்திரம்*-300)

வர்ம பீரங்கி-100, வர்ம கண்ணாடி-500, வர்மலாட சூத்திரம்-300 ஆகிய நூற்கள் மேற்கண்ட வகைப்பாட்டின்படி 108 வர்மங்களையும் பட்டியலிடுகின்றன. இம்மூன்று நூற்களின் பட்டியலிடையே சிறுசிறு வேறுபாடுகள் காணப்படுகின்றன. இம்மூன்று நூற்களின் பட்டியலையும் ஒப்பாய்வு செய்யும் போது முழுமையான வர்மத்தொகுப்பு நமக்கு கிடைக்கிறது. இந்நூலில் வர்மங்களின் எண்ணிக்கை பேதங்களை சமன்படுத்தி எந்த ஒரு நூலின் வர்மத்தையும் விட்டு விடாது 108 வர்மத் தொகுப்புகுள்ளே பட்டியலிட்டிருக்கிறோம்.

# வர்ம சூத்திரம்

ஆதியென்ற மூலவட்டக் கணபதியே காப்பு
அகன்ற பரிபூரணத்தினருளினாலே
சோதியருள் நின்றிலங்கும் பிராண தீபம்
சூட்சமதாய் யாபேர்க்கும் துலங்க வேண்டி
வாதியென்று உலகத்தில் மனுசர்க்கப்பா
வகை விபரம் கைபாகம் வழியைச் சொல்வேன்
பாதிமதி தரித்தசிவன் தன்னைப் போற்றி
பரப்பிரம்மான பொருள்பரனே காப்பு.

ஆதாரமானதொரு மூலத்துள்ளே
அகண்டமாயண்டமெங்கும் நின்ற மூர்த்தி
பாதாரந்தனைப் பணிந்து வர்மசூத்திரம்
பாடினேன் நாடி நரம்பானவாறும்
காதாரம் கொண்டுணர்ந்து என்னையாண்ட
கடாட்சமது போகருட கருணையாலே
வாதாரம் நினைந்துரைத்த வர்மசூத்திரம்
வையகத்தோர் காணாமல் மறைவில் வையே. (1)

மறைவில் தான் வைப்பதென்றால் மைந்தா கேளு
வகை விபரம் கைபாகம் மறைப்பொன்றில்லை
உறவாடிச் சிலபேர்கள் நூல் தாவென்று
ஓவியம் போல் மொழி பேசி உன்னை ஏய்ப்பார்
திறமான நூலவர்க்கு வெளிவிடாதே
சீடரென்று பன்னிரண்டு வருசங்காத்தால்
அறிவான புத்தியவருக்கிருந்துதானால்
அப்பனே பொருள் வாங்கி நூலை ஈயே. (2)

ஈவது தான் ஆருக்கு என்றால் சிவயோகிக்கு
இகத்திலுள்ள வம்பருக்கு ஈய்ந்தாயானால்
சாவதுபோல் கடைநரகில் விழுவாய் சொன்னேன்
சண்டாளர்க்கீயாதே தரணிமீதில்
நாமிதுவே வெளியாகச் சொன்னோமென்று
தரணிதனில் இந்நூலை மறைத்தார் பாரு
ஆமிதுவே நின்றவர்க்கு வர்மமெல்லாம்
அடவாகப் பலிக்குமடா அறிந்து பாரே. (3)

பாரப்பா படுவர்மம் பனிரண்டும்

பாங்கான தொடுவர்மம் தொண்ணூற்றாறும்

வேறப்பா மெய் தீண்டாக்காலமொன்று

வெற்றியென்ற பச்சிலையும் விளம்பக் கேளு

ஆரப்பா நாடி எழுபத்தீராயிரமும்

ஆராய்ந்து சொல்லுகிறேனறிந்து கொண்டு

தேறப்பா சூத்திரத்தை அறியவென்றால்

தெளிவாகச் சொல்லுகிறேன் தெளிந்து கேளே. (4)

கேளடா மனமதனையடக்க வேணும்

கொடிதான கோபமெல்லாம் தொலைக்க வேணும்

ஆரடா ஆனாலும் காலங்கொண்டால்

அப்பனே குருபரனைத் தேடவேணும்

பாரடா அனுமானைப் பூசை வேணும்

பத்திரமாயஞ்செழுத்தின் சித்தி வேணும்

சீரடா சிதம்பர சக்கரத்தை எழுதி வைத்து

சீருலகில் ஐந்தெழுத்தை சித்தி செய்யே. (5)

செய்யப்பா மூலியெல்லாம் சாபந்தீர்த்து
செயலான பச்சிலை தான் உண்டுபண்ணு
கையப்பா வர்மத்தை தேர்ந்து கொண்டால்
கருத்தான கைபாகம் அறிய வேணும்
நையப்பா இதன் விபரம் நன்றாய் பார்த்து
நலமான நூலெல்லாம் கண்டு தேறே
பையப்பா வர்மமெல்லாம் பகரக்கேளு
பராபரனை நெஞ்சுதனில் நினைந்து நேரே. (6)

## திலர்தக் காலம் - 1

நேரப்பா நெற்றி நடுபுருவம் தன்னில்
நேராக நெல்லிடைக்கும் தாழ்வதாக
தாரப்பா திலர்தக் காலம் அதற்கு பெயர்
தட்டெனவே முறிவு கொண்டால் பிழையாதப்பா
பாரப்பா பிழையாத காலமிது திலர்தக் காலம்
பேசுகிறேன் அதில் வர்மம் கொண்டால் கேளு
ஈரப்பா வாய்பிளந்து வானம் பார்க்கும்
இருக்குமடா நாழிகைதான் மூன்றே முக்கால். (7)

## இளக்குமுறை

குழையாமல் இளக்குமுறை கூறக்கேளு

குடுமி பிடித்திருத்தி உச்சி குணமாய் தட்டி

தழையாகப் பின்கலையும் செவியுமப்பா

சார்பாக சுக்கு வைத்து ஊதிடாயே

உழையாமல் அன்னப்பால் சுக்கும் சேர்த்து

உத்தமனே கொடுத்து விடு உறுதியாகும்

விழைவாக இந்த வர்மம் செய்திட்டோர்க்கு

விசித்திரமாய் முன் மருந்தை ஊதிடாயே. (8)

ஊதியே அன்னப்பால் சுக்கும் சேர்த்து

உத்தமனே கொடுத்திடுவாய் உறுதியாகும்

## நட்சத்திரக் காலம் - 2

சாதியெனும் நட்சத்திரக் காலந்தன்னை

தலங்குணமும் விபரமுடன் சாற்றக்கேளு

சோதியெனும் கடைக்கண்ணின் இறைக்குள்ளே தான்

துலங்குகின்ற குழிவதிலே காலமப்பா

வாதியென்ற வர்மமது கொண்டுதென்றால்

மஞ்சள் போல் கண் முகமும் மாறும் பாரு. (9)

முகம் மாறி வியர்வையுடன் விழி கேளாது

முதுகு விலாவிரு புறமும் குளிர்ச்சை காணும்

சுகமான நாழிகைதான் இருபத்தேழில்

உத்தமனே இளக்குமுறை உரைக்கிறேன் கேள்

சுகமாக கைவிரித்து மறுபுறத்தில்

சூத்திரமாய் தட்டொன்று சுறுக்கில்லாமல்

வகையாக இருபுறமும் தடவித் தாழ்த்து

மகிழ்ச்சியாயுச்சியிலோரடியும் போடே. (10)

போடப்பா சுக்காலே ஊதிப்போடு

புத்தியுடன் சாமையரிசிப் பாலையூட்டு

-

## செவிக்குற்றிக் காலம் - 3

காடப்பா காதில் சிறுதண்டில் தானே

கலங்காது செவிக்குற்றிக் காலமென்பார்

வீடப்பா செய்குணத்தை விளம்பக்கேளு

விழி நன்கு தள்ளி வாய்பதையும் காணும்

நாடப்பா இக்குணத்தை நன்றாய்ப் பார்த்து

நாழிகை தானிருபத்து மூன்றுக்குள்ளே. (11)

மாறும்பார் மறுபுறத்திலூன்றிக் குத்தி

மகத்தான கண்விழியும் தடவித் தாத்து

குருவதனை நினைத்து மடக்கி குத்தி

கூசாமலிரு புறமும் தாழ்த்து வாங்கு

கருவறிந்து கை பிணைத்து தலைமேல் வைத்து

கமலமதிலடியடித்து காதிரலூதி

அருகிருந்தோரறியாமல் இளகும் பாரு

அரிசியிட்டு அன்னப்பால் சுக்குமாமே. (12)

## பிடரிக்காலம் - 4

ஆமப்பா இன்னுமொரு காலம்சொல்வேன்

ஆச்சரியமாச்சரியமிது போலுண்டோ

தாமப்பா வளை முடிந்த தலத்திலே தானே

சார்வான குழிவதிலே பிடரிக்காலம்

ஓமப்பா ஒடிவுடனே அடிகள் குத்து

ஊக்கமுடன் கொண்டுதானால் உடனே சாகும்

நாமப்பா தலைகுழைந்து கண்ணும் மூடி

நன்றாகத் தானடுங்கிக் கிடுங்குமாமே. (13)

நாடுமப்பா நாழிகை தான் மூவெட்டையா

நன்றாக இளக்குமுறை நவிலக்கேளு

ஓடுமப்பா எடுத்திருத்தி அசையாமல் தான்

உத்தமனே உச்சியிலோரடியும் போடு

ஆடுமப்பா கண்டத்தில் அணுவாகத்தான்

அசைத்துவிடு இருபுறமும் கயிறுபோலாம்

மாடுமப்பா கறியுப்பு அன்னப்பாலும்

மைந்தனே கொடுத்து விட மாறும் தானே. (14)

# வர்ம சூடாமணி

## என்னும்

# பஞ்சீகரணப் பின்னல்

ஆதிமுதல்அந்தம்முடிவில்லாஞான
ஆதாரதோற்றமதாய்அளவில்லாத
சோதிசுடர்சதாசிவயோகாயோகம்
சூட்சமாய்அருசிவனுள்கோட்டைக்குள்ளே
ஓதிமுடியாதசிவசூட்சமான
உள்அறிவின்சாயூட்சியஅமுர்தகோணில்
பாதிமதிதரித்தசிவன்அடிமுடியுமாகி
பரபிரமம்தானானபரனேகாப்பு. (1)

காப்பானஉள்அறிவாலேசோதிகண்டு
கருதிப்பார்சூட்சமதின்ஆவியாலே
ஆப்பானகாரணத்தின்பரமும்காணும்
அறிவூன்றியபசுவாசிதேர்ந்தசந்தம்
தோப்பானபரபாதம்வெளியாய்தோன்றும்
தொடுத்தேறுபேசாதஎழுத்தையுண்ணு

தோப்பானபிறாணாயபுரவிஏறி

கொடுசாக்கிரஅறிவாலேசிவத்தைக்காணே. (2)

காணவேஇந்நூல்தான்குருவாய்நிற்கும்

கருவானஇந்நூல்தான்நன்னூலாகும்

தோணவேமுன்நூலும்இதுவேயாகும்

தொகுப்பானபலநூலும்பார்க்கவேண்டாம்

பூணவேபலநூலும்பார்த்தலைந்து

புத்திதடுமாறிமெத்தஅலைந்திடாமல்

வாணாளைபோக்கடித்துமனம்புண்ணாக்கி

வெறுதேநீஅலையாதேநாயைபோலே. (3)

நாய்போலேஅலையாதேயிந்நூல்பாரு

நாதனருள்உள்வைத்துயிந்நூல்நாடு

தாய்போலேவர்மசூடாமணிபின்னலுக்குள்

தப்பாமல்சகலசூத்திரம்சொல்வேன்நன்று

காய்பழம்போல்பழுத்தபேர்கள்அறிவார்யிந்நூல்

கண்மணியேஅறியாதோர்வெறிமயங்கி

வாய்மொழியாய்தழுவியுன்னைவணங்கிகேட்பார்

வகைவிவரம்உள்சூத்திரம்அடக்கம்வையே. (4)

## நூலின்விபரம்

விபரமாய்உற்பனத்தின்கணக்கின்போக்கும்
விவரிப்பேன்தொடுகருவிவர்மப்போக்கும்
தபமாகநூல்சூட்சகாரணத்தின்போக்கும்
தவறாமல்இரட்டையென்றதின்விவரங்கள்
பவமானவாசிநிலைகணக்கின்போக்கும்
பதிதலங்கள்உறவாடும்தலத்தின்போக்கும்
கவயானபடுவர்மதலத்தின்போக்கும்
கண்ணேஎனஅதில்மருவும்இணைவர்மந்தான். (5)

இணையானஎலும்புதொகைவிவரப்போக்கும்
இசைந்ததொருநரம்பினுடதொகையின்போக்கும்
பிணையானபொருத்திசைவுதலத்தின்போக்கும்
பொறியானமுடிச்சினுடவிபரப்போக்கும்
கணையானநூல்பஞ்சிகரணப்போக்கும்
கருவானஒடிமுறிவுகெட்டும்போக்கும்

துணையானசாத்தியமும்அசாத்தியபோக்கும்

சூட்சமாய்நரம்பினுடபின்னல்போக்கும். (6)

போக்கானகைகாலால்செய்யும்போக்கும்

பொறியானஅமிர்தஏற்றம்விசத்தின்போக்கும்

வாக்கானதசவாய்வுதசநாடிக்குள்

வழியாகநடனமிடும்தலத்தின்போக்கும்

தாக்கானஅடங்கலதுதொகைமாத்திரைபோக்கும்

தடுமாறாஉள்வாசிநிலையின்போக்கு

நோக்கானமயக்கநிலைகணக்கின்போக்கும்

நுட்பமாய்ஊதியெழுப்பும்வகையின்போக்கும். (7)

வகையானசன்னிஊதிநிறுத்தும்போக்கும்

மங்கையர்கள்கர்ப்பத்தில்மயக்கமுற்றால்

தகையாமல்ஊதியேஇளக்கும்போக்கும்

தப்பாமல்பாலர்களைகைதொடாதேஇளக்கும்போக்கும்

பகையாமல்இன்னும்பலவிதத்தின்போக்கும்

பகருவேன்கசாயமொடுதைலபோக்கும்

தொகையானஎண்ணெயொடுபொடியும்தப்பளம்

சூட்சமாய்குளிகையொடுவாற்றும்ஆமே. (8)

## சனனஉற்பத்தி

ஆமென்றகருக்குழியில்சுரோணிதத்தில்
அடவாகசுக்கிலந்தான்உருப்போல்கலந்து
ஓமென்றுஇருபேரும்ஒன்றுபட்டு
ஒன்றாகசேருமப்பாபிராணவாய்வால்
தாமென்றகர்ப்பஉற்பனமேயாகும்
தவறாமல்இரதகலையும்ரசகலையும்கூடி
வாமென்றபிராணவாயுதாய்போல்சென்று
வாழ்விக்கும்ஆத்துமாமுன்னிட்டுநின்றே. (9)

நின்றாடும்மணிபோலேவளர்க்கும்போதே
நிறைந்ததொருஉதானனதுமேல்போட்டேதான்
மன்றாடிவளர்க்குமேமூலவாய்வு
மகத்தானஎண்ணெய்சலம்கலர்ந்தாப்போலே
நன்றானசப்ததாதுஏழில்தூலம்
நாதனார்அருளாலேஉருவுமாகி
சென்றாடும்உடலெடுத்துகருவிவர்க்கம்

சேகரமாய்தொண்ணூற்றாறுகருவியாச்சே. (10)

## சூட்சம்

ஆச்சிந்தபடிவாய்வின்பலத்தினாலே

அருள்பெறவேகலையிறைபாய்ச்சலுற்று

வாச்சிந்தசிவகலைபிராணகலை

வகுப்பாகஓட்டமுற்றுஉயிருமாச்சு

காட்சியுறுநூல்சூட்சம்காரணத்தில்

கருவானகருவியினம்சடத்தில்சொல்லே

மாட்சிமையால்உற்பனத்தின்விவரமெல்லாம்

மகிமையாய்உற்பனசாரிமுப்பத்தியாறில். (11)

## கருவிநூற்றெட்டின்விபரம்

ஆறானஅந்நூலில்வெளியாய்சொன்னேன்

அப்பனேஅந்நூலைகண்டுதேறு

வீறானசடம்மூன்றுபங்குக்குள்ளே

விரித்ததத்துவக்கருவியினம்பிரித்துக்கேளு

கூறானதூலத்தில்இருபத்தியஞ்சு

கூண்டசூட்சுமம்முப்பத்திஅஞ்சதாகும்
ஈறானகாரணத்தில்முப்பத்தாறு
இசைக்கருவிதொண்ணூற்றாறுதலமும்ஆகும். (12)

ஆகுமேதொடுகருவிதொண்ணூற்றாறும்
தொகுப்பானதொடுவர்மம்ஆகும்பாரு
வேகமாய்படுவர்மம்பன்னிரண்டில்
வேந்தனேநின்றகருவிஅறியச்சொல்லு
யோகமாய்பன்னிரண்டுகருவிஎங்கே
என்னப்பாஇல்லாட்டால்நூற்றெட்டேது
ஏகமாய்நூற்றெட்டுவர்மமானால்
உத்தமனேபன்னிரண்டும்அறிந்தோன்ஆசான். (13)

ஆசானாய்திரிவார்கள்கோடாகோடி
அப்பனேபொருளறிந்தோர்சுருக்கமாகும்
வேசையைப்போல்உடைநடையும்பார்வைக்காட்டி
மெருட்டியேபேசிடுவார்வீணதாக
காசுபணம்தான்பறித்துவயிறுகழிக்கும்
கர்மமெடாஅவன்பழியோவழியறியான்

நீசனும்தேகதேகிஅறும்பிக்கருவி

நிலைகெட்டபாங்குடமாம்குருட்டாசான்தானே. (14)

## ஸ்தூலதத்துவம்

குடம்போலேசடமெடுத்ததூலத்தத்துவம்

கூறுகிறேன்பூதமஞ்சுஞானபொறிஅஞ்சாம்

சடத்திலேபுலன்அஞ்சுஞானகற்மமேந்திரியம்

சாற்றுகிறேன்அஞ்சுடனேகற்மேந்திரியமஞ்சாம்

மடத்திலேஇவைதூலமிருபத்தஞ்சாம்

மைந்தனேசொல்லிவிட்டேன்சூட்சமாக

கடனில்லாசூட்சுமதத்துவம்முப்பத்தியஞ்சும்

கருத்தாகசொல்லுகிறேன்கண்ணேகேளு. (15)

## சூட்சுமதத்துவம்

கண்ணானகரணம்நாலுஅறிவுவொன்று

கதிப்பானவாயுபத்துநாடிபத்து

ஒண்ணானஆசயம்அஞ்சுகோசமைந்து

உத்தமனேசூட்சுமதத்துவம்முப்பத்தியஞ்சு

விண்ணானஇதுகளுக்குள்ளேசூத்திரமுண்டு

வினவிடிலோதொல்லையப்பாஅறிவோர்க்காம்

மண்ணானமண்ணகற்றிவிண்ணறிந்த

மாசில்லாஅதன்விவரம்அறிவுள்ளோர்க்கே. (16)

## காரணதத்துவம்

அறிவானகாரணத்தின்தத்துவங்கள்

அறைகிறேன்முப்பத்திஆறும்கேளு

குறியானஆதாரம்ஆறுமண்டலம்மூன்று

கூறுகிறேன்மலம்மூன்றுதோசம்மூன்று

பிரிவானஏடணைமூன்றுகுணமும்மூன்று

பிசகாதராகமெட்டுவினையும்ரண்டு

தெளிவானஅவத்தையஞ்சும்கூட்டிப்பாரு

தெளிவானதொண்ணூற்றாறுபிரிவும்கேளே. (17)

## பூதம் - 5, பொறி - 5, புலன் - 5

கேளுநீபிருதிவிமண்ணுஅப்புவெள்ளம்

கிளர்தேயுதீயாகும்வாயுகாற்று

மீளுமேஆகாசம்வெளியதாகும்

முக்கியமாய்பொறியஞ்சின்விபரம்கேட்பாய்

ஆளுமேதோத்திரம்செவியதாகும்

அப்பனேதொக்குதொலியாகும்கண்டாய்

தாகுமேசட்சுகண்ணுசிங்நுநாக்கு

தவறாதேஆக்கிறாணம்மூக்குமாமே. (18)

## கன்மேந்திரியம்அஞ்சு

ஆமென்றசத்தமதுவாய்வுமாகும்

அப்பனேபரிசமதுகாற்றுமாகும்

ஓமென்றரூபம்கண்ரசம்நாக்காகும்

ஓகோகோகெந்தமதுமூக்குமாகும்

தாமென்றவாக்குவாய்பாதம்காலு

தங்கியேபாணிகைபாயுருகுய்யம்

வாமென்றஉபத்தமதுலிங்கமாகும்

வளமானஞானேந்திரியவிபரம்சொல்வேன். (19)

## ஞானகன்மேந்திரியம்

சொல்வசனம்வாயாகும்கமனம்காலாம்

கெடியதானம்கையாகும்குறிப்பாய்கேளு

வல்லதொருவிசற்கமதுகுய்யமாகும்

வளமானஆனந்தம்லிங்கமாகும்

நல்லதொருதூலதத்துவம்இருபத்தஞ்சும்

நலம் பெரியஅதன்பிரிவுமாச்சு

அல்லலில்லசூட்சுமதத்துவம்இருபத்தஞ்சே

அறைகிறேன்வெளியாகபிரிவுபாரே. (20)

## காரணதூலப்பிரிவு

வெளியானகாரணதூலம்சொல்லக்கேளு

விள்ளுகிறேன்மனம்நினைவுபுத்திவிசாரிப்பாம்

ஒளியானசித்தமதுமுடிப்புமாகும்

ஒண்டொடியேஆங்காரம்கொண்டெழுப்பும்

தளியானஅறிவுஎன்னவென்றால்

தராதரமாய்போய்வரவைபார்த்திருக்கும்

சுளிக்குமந்ததசவாயுபிரிவுகேளு

இசைகலந்ததொருபிராணவாயுதோப்புக்குள்ளே. (21)

## வாய்வுபத்தின்பிரிவு

உள்ளானபிறாணன்ஆளேறாசிகரம்சுற்றி

உயிர்க்குயிராய்சாக்கிரத்தின்தமரில்நிற்கும்

பள்ளானஅபானன்குய்யம்பற்றி

பாலகனேமலசலத்தைகழிப்பதாகும்

கள்ளமில்லாவியானனதுதொலிமேல்நின்று

கருவாகபரிசமதுஅறியச்செய்யும்

துள்ளானஉதானனுடநிலைவயிற்றில்

சுகமாகஉண்டவகைஊட்டல்பாங்காய். (22)

# வர்ம கண்ணாடி - 500

ஆதியாய்முச்சுடராய்ஒருவராகி

அம்புவினைபடைத்தகந்தன்அருளினாலே

நீதியாம்சித்தர்பாதம்சிரசிலேந்தி

நித்தியமாம்பெரியோர்கள்சரணம்போற்றி

சோதியாய்இலங்கும்எந்தன்குருவைப்போற்றி

சூட்சமாய்வர்மமதுஒளிபோல்தோன்ற

ஓதியேவர்மகண்ணாடிஎன்றுரைப்பதற்கு

ஆதிபரன்தாழ்துணைகாப்பாமே. (1)

ஆமேதான்வர்மத்தில்அனேகநூல்கள்

அவரவர்கள்சொல்லிவிட்டார்அவனிமீதில்

ஓமேதான்வெகுநூல்கள்ஆய்ந்துபார்த்து

உலகுதனில்இந்நு}லைநன்நூலாக

ஓமேதான்நல்லவர்க்குஆகுமென்று

உரைத்துவிட்டேன்வெளியரங்கமாக்கிடாமல்

தீமைதான்வந்திடினும்இந்நூல்கொடாதே

சிவசிவாஇதன்பெருமைசெப்பலாமே. (2)

செப்புதற்குஇன்னுமொருஉபாயம்கேளு

சீசனுமேஆவதற்குவருவானாகில்

தப்புகள்தான்ஒன்றும்இல்லாதானாய்

தன்னுயிர்போல்எவ்வுயிரும்கருதுவோனாய்

இப்புவியில்உன்மனதுக்கிணங்குவோனாய்

இருப்பவனேஆனாக்கால்தெரிந்தெடுத்து

ஒப்பதுள்ளஈராறுவருடம்காத்தால்

ஒத்தபொருள்வாங்கிதலம்காண்பிப்பாயே. (3)

காண்பித்ததலம்அதனைவெளிவிடாமல்

காசினியில்உனக்கெதிராய்யார்வந்தாலும்

நாணித்துபின்வாங்கும்நல்லோர்போலும்

நயவாக்கும்நீஅவனுக்குஉரைத்துப்போட்டு

தோணித்துஎப்படியும்மகிழ்ந்துபோற்றி

சொல்லுநீபோகஎதிர்ப்பானாகில்

ஆண்மையுள்ளவர்மகண்ணாடிஇந்நூல்மார்க்கம்

அப்பனேசெய்யில்உயிர்அடங்கலாச்சே. (4)

அடங்கும்உயிர்மீழ்வதற்குநூல்கள்தோறும்

அவ்வாறேசொல்லிவிட்டேன்கடிகைதானும்

திடம்பெறவேஇளக்குதற்குமூலிதானும்

தேகமெங்கும்தடவிதட்டிஇளக்கச்சொன்னோம்

குடம்தனிலேசலம்விட்டுசங்காளம்நீங்க

குமுக்கெனவேமுகத்தெறியமந்திரம்சொல்வேன்

தடமிதுவேஓம்என்றுசொல்லிச்சொல்லி

சார்வாகஅடங்கலினால்இளக்குவாயே. (5)

இளக்குதற்குஇன்னும்ஒருஉபாயம்கேளு

எல்லையதுதடுமாறிவிழுதல்தட்டல்

வளரும்பலமூர்க்கமதில்கோபம்கொண்டு

வந்தவர்மம்தீர்க்கஒருஉபாயம்கேளு

பளக்கமுள்ளசுற்றத்தார்உறவரோடு

முறையாகநீகேட்டுஇளக்கச்சொன்னால்

பழக்கமுள்ளசீசனையும்துணையாய்வைத்து

பலபேர்கள்அறியாமல்மறைவில்வையே. (6)

மறைவென்றால்திரையதிலோபுரையதிலோதான்

மற்றவர்கள்அறியாமல்இருக்கவேணும்

துறையதனைபலபேர்கள்அறிந்திட்டாக்கால்

சொல்புவியில்வித்தையதுபோச்சுபோச்சு

தறைதனிலேஉனக்குமொருமகிமைஇல்லை

தரணிதனில்ஒருவரும்மதிக்கமாட்டார்

இறையவனின்கிருபையினால்ஏகும்அப்பா

வர்மகண்ணாடி ஆகும்இதுஇயம்புவோமே. (7)

ஆமேதான்இந்நூலின்பெருமைகேளு

அப்பனேதத்துவமொடுஅளவுதூக்கம்

நாமேகேள்கருவிமுதல்நரம்பெலும்பு

நாடி முதல்சாத்தியமோடசாத்தியம்தான்

ஓமேகேள்வாதபித்தசேர்ப்பனத்தாலும்

ஊன்றுவர்மம்முதல்உள்ளுவர்மம்கொண்டால்

தாமேகேள்இன்னதென்றுவிவரமாக

சாற்றினார்அகஸ்தீசர்தரணியோர்க்கே. (8)

தரணிதனில்வெகுபேர்கள்ஆசானாக

தங்களைப்போல்ஒருவரும்இல்லைஎன்று

நிரணமதாய்தன்னைத்தான்உயர்த்திப்பேசி
நீனிலத்தில்பலபேர்க்கும்உபதேசிப்பார்
பாரமுடன்தலமறியார்நரம்பைக்காணார்
வளமாககருவியொடுஆதாரம்காணார்
துரவுடனேகைகாணார்மெய்யைக்காணார்
